# களத்தில்

> தமிழ் மக்களின் போராட்டம், தன்னாட்சி உரிமையை வென்றெடுப்பதற்கான போராட்டம். நமது அரசியல் தலைவிதியை நாமே நிர்ணயித்துக்கொள்ளும் சுதந்திரத்திற்கான போராட்டம்.
>
> தமிழீழத் தேசியத் தலைவர்
> மேதகு வே. பிரபாகரன் அவர்கள்



05-04-2001 தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கிவரும் செய்தித்தாள் (231)

# மாபெரும் மனிதப்பேரணி




## தமிழீழ மக்கள் தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடையோர்!
## தமிழீழ விடுதலைப் புலிகளே தமிழீழ மக்களின் ஏக பிரதிநிதிகள்!!
## ஐக்கிய நாடுகள் சபை முன்றலில் திரண்ட பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட தமிழர்கள் முழக்கம்

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

**02-04-01** அன்று, ஐரோப்பிய நாடுகளில் இருந்து பலதிசைகளிலும் புறப்பட்டுச் சென்ற தமிழர் வெள்ளம் சுவிஸ் ஜெனீவாவில், ஐக்கிய நாடுகள் சபை முன்றலில், வந்து கலந்தது. தமது தாயக மண்ணின் துயர் சர்வதேச சமூகத்தின் காதுகளை எட்டிவிட வேண்டும் என்ற துடிப்புடன், உணர்ச்சிப் பெருக்குடன் கோசங்களை எழுப்பியபடி, தமது தேசிய அபிலாசைகளை ஓங்கிப் பறைசாற்றியபடி நகர்ந்தது தமிழர் வெள்ளம். சுவிசின் பலபகுதிகளில் இருந்து விசேடமாக ஒழுங்கு செய்யப்பட்ட தொடரூந்துகளிலும் பஸ்வண்டிகளிலும் தனியார் வாகனங்களிலும், ஜெனீவாவை வந்தடைந்தனர் தமிழர்கள். ஜேர்மனி, பிரான்ஸ், நெதர்லாந்து, டென்மார்க் போன்ற நாடுகளில் இருந்தும் பல்லாயிரக்கணக்கான தமிழ்மக்கள் தமது தேசியக் கடமையொன்றை நிறைவேற்றும் துடிப்புடன் வந்துகலந்தனர்.

பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட தமிழர்கள் பௌத்த சிங்களப் பேரினவாத ஆட்சியின் கொடுமைகளைத் துகிலுரித்து நிற்கும் பதாகைகள், கொடிகள், வானளாவ முட்டி எதிரொலிக்கும் தமிழீழ மக்களின் தேசிய அபிலாசைகள் இப்படியாக, ஐக்கிய நாடுகள் சபை முன்றல் மனிதர்களாலும், அவர்தம் உள்ளத்து வெளிப்பாடுகளாலும் நிறைந்திருந்தது.

விடுதலைப் புலிகளைப் பயங்கரவாத அமைப்பாகப் பட்டியலிட்டு, தமிழின அழிப்புக்கு சர்வதேச ஆதரவைத் திரட்டப் புறப்பட்டிருக்கும் சந்திரிகா அரசின் உண்மைத் தோற்றத்தையும், தமிழ்மக்களின் தேசிய நிலைப்பாட்டையும், எங்கெங்கோ இருந்து திரண்ட பல்லாயிரம் தமிழர்கள் சர்வதேச சமூகத்தின் மனச்சாட்சியின் முன் வைத்தனர்.

புலம்பெயர்ந்து வாழும் தமிழீழ மக்கள் சார்பில், அங்கு முன்வைக்கப்பட்ட பிரகடனம், தமிழ்மக்களின் முடிபுகளையும், அவர்தம் தேசிய அபிலாசைகளையும், இத்தேசிய இனம் சந்தித்த ஏமாற்றங்கள் கவலைகளையும் தொட்டுநிற்கின்றது.

## [illegible] பேரணியில் முன்வைக்கப்பட்ட பிரகடனம்

- தமிழீழ விடுதலைப் புலிகளால் ஒருதலைப்பட்சமாக அறிவிக்கப்பட்டுள்ள யுத்தநிறுத்தத்தை சிறீலங்கா அரசு ஏற்றுக்கொள்ளவேண்டும்.
- சிறீலங்கா அரசால் கடந்த பத்தாண்டுகளிற்கு மேலாக தமிழ்மக்களுக்கு எதிராக விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத்தடையை நீக்கி பேச்சுவார்த்தைக்குரிய சுமூக சூழ்நிலையை உருவாக்கவேண்டும்.
- தமிழரின் தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமை ஆகியவற்றை அங்கீகரித்து, அதன் அடிப்படையில் தமிழர் போராட்டத்திற்கு தீர்வு காணப்படவேண்டும்.
- ஒருதலைப்பட்சமாக யுத்தநிறுத்தத்தை அறிவித்து பேச்சுவார்த்தைக்குத் தயாராகநிற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளை பிரித்தானிய அரசு பயங்கரவாத அமைப்புக்களின் பட்டியலில் இணைத்தநாள் தமிழ்மக்களாகிய எமக்கு ஒரு துக்க நாளாகும். இச்செயலானது தமிழ்மக்களாகிய எமக்குப் பெரும் ஏமாற்றத்தையும் கவலையையும் கொடுக்கின்றது.
- தமிழீழ மக்களின் ஏகப்பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையைப் பிரித்தானியாவும் மற்றைய நாடுகளும் நீக்கி, நோர்வேயின் பேச்சுவார்த்தை முன்னெடுப்புக்களுக்கு ஆதரவு கொடுக்கவேண்டும்.
- சிறீலங்கா அரசு தமிழ் மக்களுக்கெதிராகத் தன் அரசபயங்கரவாதச் செயல்களை உடன் நிறுத்த, அதற்கு அழுத்தங்கள் கொடுக்க, ஐக்கிய நாடுகள் சபையும், அனைத்துலகச் சமூகமும் முன்வரவேண்டும்.
- கொடுமையான யுத்தத்தின் அகோரத் தன்மையால் தம் சொந்த மண்ணைவிட்டு வெளியேறி, புலம்பெயர்ந்துள்ள தமிழ் மக்களை, இலங்கைத் தீவில் நிரந்தரத் தீர்வும், அமைதியும் ஏற்படும்வரை திருப்பி அனுப்பக்கூடாது.

இவ்வாறு, அங்கு திரண்ட பல்லாயிரக் கணக்கான மக்கள், புலம்பெயர்ந்து வாழும் தமிழ்மக்கள் சார்பில் பிரகடனம் செய்தனர்.

தமிழ் இனத்தின் மீது மேற்கொள்ளப்படும், சிங்களப் பேரினவாத ஆட்சியாளர்களின் பயங்கரவாதச் செயல்களை அம்பலப்படுத்தியும், தமிழ் மக்களின் தேசிய அபிலாசைகளை வலியுறுத்தியும் நடத்தப்பட்ட இம்மாபெரும் பேரணியில், தமிழ்நாட்டில் இருந்து வருகை தந்திருந்த தமிழின உணர்வாளர் திரு. கட. வீரபாண்டியன் அவர்களும் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார். சுவிஸ்நாட்டின் பாராளுமன்ற உறுப்பினர்களும் இப்பேரணியின்போது உரையாற்றினர். சுவிஸ் தொழிலாளர் கட்சியைச் சேர்ந்த ஜெனீவா மாநில பாராளுமன்ற உறுப்பினர் பேன் கிம்செலாக், மற்றும் பசுமைக்கட்சியைச் சேர்ந்த பேர்ன் மாநில பாராளுமன்ற உறுப்பினர் பிரான்சிஸ்கா டெப்பர் ஆகியோர் தமிழ்மக்கள் மீது கொண்ட அக்கறை அனுதாபம் காரணமாக இப்பேரணியில் கலந்துகொண்டனர். அனைத்துலகத்தைச் சேர்ந்த மனித உரிமைகள் சட்டத்தரணி கரன் பாக்கர், செவ்விந்திய மக்களின் விடுதலைக்கான அமைப்பைச் சேர்ந்த அன்ரனியோ கொன்சலஸ் உட்படப் பல அனைத்துலகப் பிரமுகர்கள், அறிஞர்கள், மனித உரிமை ஆர்வலர்கள் இப்பேரணியில் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது. ■

## புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்



# சந்திரிகா அரசும் சமாதானமும்

விடுதலைப் புலிகள் நான்காவது தடவையாக தமது, ஒருதலைப்பட்ச போர்நிறுத்தத்தை நீடிப்புச் செய்திருக்கின்றனர். கூடவே, சிறீலங்காப் படையினரின் போர்முனைப்புகள், மற்றும் ஆத்திரமூட்டும் செயற்பாடுகளுக்குக் கடுமையான எச்சரிக்கையும் விடுத்திருக்கின்றனர்.

'நமது நல்லெண்ண சமாதான முயற்சியைத் தொடர்ந்து உதாசீனம் செய்து, சிங்கள ஆயுதப்படைகள் போர்நடவடிக்கைகளை, விமானத் தாக்குதல்களை தீவிரப்படுத்தினால் விடுதலைப் புலிகள் இயக்கமானது தனது தன்னிச்சையான போர்நிறுத்தத்தை ரத்துசெய்ய நேரிடும் என சிறீலங்கா அரசாங்கத்திற்கு நாம் எச்சரிக்கை செய்ய விரும்புகின்றோம்' இவ்வாறு, விடுதலைப் புலிகளின் தலைமைப்பீடத்தால் வன்னியில் இருந்து 22.03.2001 அன்று வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைக் கடற்பரப்பில் கடந்த 21ம் திகதி இடம்பெற்ற பாரிய கடற்சமரின் பின்னராக, விடுதலைப் புலிகளின் இந்த எச்சரிக்கையுடன் கூடிய, போர்நிறுத்த கால நீடிப்புப் பற்றிய அறிவித்தல் வெளிவந்திருக்கின்றது.

கிறிஸ்மஸ், புதுவருடம், பொங்கல், றம்ழான் பண்டிகைக் காலங்களை உள்ளடக்கி, நோர்வேயின் சமாதான முயற்சிக்கு ஆதரவுதெரிவித்து, நல்லெண்ண சமிக்ஞையாக டிசம்பர் 24ம் திகதியில் விடுதலைப் புலிகளால் அறிவிக்கப்பட்ட ஒருதலைப்பட்ச போர்நிறுத்தம், தற்போது நான்காவது மாதமாகத் தொடர்கின்றது.

இக்கால இடைவெளியில், விடுதலைப் புலிகளின் போர்நிறுத்தத்திற்கு சாதகமான பதிலளித்து, போர்நிறுத்தத்தை மேற்கொண்டு, சமாதான புறநிலையைக் கட்டியெழுப்பும் பொறுப்புள்ள நடவடிக்கைக்குப் பதிலாக, சந்திரிகா அரசு, பொறுப்பற்ற முறையில் நடந்து கொண்டிருக்கின்றது. விடுதலைப் புலிகள் பலவீனமாகிவிட்டார்கள் அதனாலேயே பேச்சவார்த்தைக்கு உடன்பட்டார்கள் எனவும், விடுதலைப் புலிகளின் போர்நிறுத்த அறிவித்தல் ஒரு பொறி எனவும் வர்ணித்துவரும் சந்திரிகா அரசு, போர் நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்துவதுடன், சர்வதேசரீதியாக விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதிகளாகப் பட்டம் சூட்டும் முயற்சியிலும் கடுமையாக ஈடுபட்டுவருகின்றது.

கடந்த மாதம் 21ம் திகதி, முல்லைக் கரையோரக் கிராமங்களான புதுமாத்தளன், சுண்டிக்குளம் மீது சிங்களப்படையினர் நடத்திய மோசமான குண்டுவீச்சுத் தாக்குதலில், நான்கு பொதுமக்கள் கொல்லப்பட்டு இருபதுக்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

கடந்த சில வாரங்களில், நாகர்கோவில், எழுதுமட்டுவாள், கிளாலிப் பகுதியில் பத்துத் தடவைகளுக்கு மேல் சிங்களப்படையினர் குண்டுவீச்சுக்களை நடாத்தியுள்ளனர். கடந்த 22ம் திகதி மட்டக்களப்பு மாவட்டத்தில் தொப்பிக்கலப் பகுதியில் பாரிய குண்டுவீச்சுக்களை சிங்களப்படையினர் நடத்தினர். கடந்த 25ம் திகதி, பூநகரிப் பகுதியில் சிங்கள விமானப்படை விமானங்கள் குண்டுவீச்சுக்களை நடத்தியுள்ளன. கடந்த 11ம் திகதி, நாகர்கோவில் எழுதுமட்டுவாள் பகுதியில் ஆக்கிரமிப்பு நடவடிக்கையை மேற்கொண்டு தோற்றது சிங்களப்படை. மீண்டும் 29ம் திகதி, நாகர்கோவில் மற்றும் எழுதுமட்டுவாளுக்கும் இடைப்பட்ட பகுதியில், பெரும் ஆக்கிரமிப்பு முயற்சியொன்றை மேற்கொண்டு இழப்புக்களுடன் தோற்றனர் சிங்களப்படையினர். கிழக்கில் புனானையில் கடந்த 26ம் திகதி, குண்டுவீச்சுக்களையும் எறிகணைத் தாக்குதல்களையும் நடத்தியது சிங்களப்படை.

இப்படியாக, போர்நடவடிக்கைகளை விரிவுபடுத்திவருகின்றது சிறீலங்கா அரசு. தமிழ்மக்கள்மீதான மோசமான பயங்கரவாதச் செயற்பாடுகளையும் சிங்களப்படையினர் கட்டவிழ்த்துவிட்டுள்ளனர். கொலைகள், பாலியல் வதைகள், ஆட்கடத்தல், கைதுகள் சித்திரவதைகள் என தமிழ்மக்களுக்கெதிரான சிங்கள அரச பயங்கரவாதம் விஸ்வரூபம் எடுத்திருக்கின்றது. இவையாவும் திட்டமிடப்பட்ட ஆத்திரமூட்டும் செயல்களாகவே படுகின்றன. விடுதலைப் புலிகளை பலவீனமாக்கினாலேயே, சமாதானத் தீர்வைக் காணமுடியும் என, தனது இராணுவச் செயற்பாடுகளை நியாயப்படுத்திவரும் சந்திரிகா அரசு, விடுதலைப் புலிகளைப் பயங்கரவாத அமைப்பாகப் பிரகடனப்படுத்தவும், இதன்மூலம் புலம்பெயர்ந்து வாழும் தமிழ்மக்களிடம் இருந்து விடுதலைப் புலிகளைத் தனிமைப்படுத்திவிடலாம் எனவும் மனப்பால் குடித்தபடி, உலகநாடுகளிடம் கோரிக்கை விடுத்துவருகின்றது.

உண்மையில், சமாதான முயற்சிகளை முறியடித்து, மீண்டும் போரைத் தொடரவைக்கவே சிறீலங்கா அரசின் அனைத்துக்காரியங்களும் உதவும் என்பதில் சந்தேகமில்லை. ■

# சர்வதேச மன்னிப்புச் சபையும் சிறுவர் படையும்

கடந்த சில தினங்களிற்கு முன்னர், சர்வதேச மன்னிப்புச் சபை விடுதலைப் புலிகள் மீது ஒரு குற்றச்சாட்டை முன்வைத்தது. வவுனியாவில் மூன்று சிறுவர்கள் காணாமல் போயுள்ளனர் எனவும், அவர்கள் விடுதலைப் புலிகள் அமைப்பில் இணைந்திருக்கலாம் எனவும் தெரிவிக்கும் சர்வதேச மன்னிப்புச்சபை, விடுதலைப் புலிகள் சிறுவர்களைப் படையில் சேர்த்துவருவதாகக் குற்றஞ்சாட்டுகின்றது.

விடுதலைப் புலிகள் தமது சண்டை அணிகளில் சிறுவர்களை இணைப்பதில்லை என்பதை ஏற்கெனவே தெளிவுபடுத்தி யிருக்கின்றனர். சிறீலங்காவின் தற்போதைய உதவிச் சபாநாயகரும், முன்னாள் சிறீலங்காவின் இராணுவப் பேச்சாளருமான சரத் முனசிங்கா எழுதிய 'ஒரு போர்வீரனின் வாக்குமூலம்' என்ற புத்தகத்தில் விடுதலைப் புலிகள் சிறுவர்களைச் சண்டையில் ஈடுபடுத்துவதில்லை என்பதைத் தெட்டத் தெளிவாகக் கூறியிருக்கின்றார்.

வீட்டை விட்டு விளையாடப்போவதாகவும், பஸ்தரிப்பு நிலையம் செல்வதாகவும் கூறிச்சென்றவர்கள் காணாமல் போயிருக்கின்றனர் என்பதை வைத்துக்கொண்டு, விடுதலைப் புலிகள் சிறார்களைப் படையில் சேர்க்கின்றார்கள் என்று குற்றஞ்சாட்டுவது சர்வதேச மன்னிப்புச் சபையின் பொறுப்பான நடவடிக்கையாகக் கொள்ளமுடியவில்லை.

உண்மையில் சிறுவர்கள்மீது அக்கறை கொள்வதாகக் கூறிக்கொள்ளும் இத்தகைய அமைப்புக்கள், நமது மண்ணில் இளம் சிறார்களின் மோசமான நிலையைக் கண்டுணர்ந்து இதனை நிவர்த்திசெய்ய முன்வருவதில்லை என்பதுதான் விசித்திரம்.

மன்னாரில், உப்புக்குளத்தில் மார்ச் 19ம் திகதி, இரண்டு குடும்பப் பெண்கள் சிங்களப்படையினரால் கைதுசெய்யப்பட்டு, மோசமான முறையில் பாலியல் வல்லுறவுக்கும், பாலியல் சித்திரவதைக்கும் ஆளாகியிருக்கின்றனர். இருவரும் குடும்பப் பெண்கள், ஒருவர் மூன்று பிள்ளைகளின் தாய். மற்றையவர் ஒரு பிள்ளையின் தாய். சிங்களப்படையின் பாலியல் வல்லுறவுக்கு [illegible] ஒருவர் கர்ப்பிணி. மற்றைய பெண்ணின் ஏழுவயது மகனும் தாயுடன் சேர்த்துக் கைதுசெய்யப்பட்டிருக்கின்றார். சிறுவனின் முன்னிலையிலேயே அச்சிறுவனின் தாய் மீதான பாலியல் சேட்டைகளை சிங்களக் காடையர்கள் மேற்கொண்டிருக்கின்றனர். தற்போது அச்சிறுவன் வன்னியிலுள்ள தாயாரின் குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்றார். வழமைபோல விசாரணைகள் நடக்கின்றன. மன்னார் ஆயர் இராஜப்பு ஜோசப்பு ஆண்டகை தெரிவித்திருப்பதுபோல, விசாரணைகள் இழுத்தடிக்கப்பட்டு, கிடப்பில் போடப்படும். சிறீலங்கா அரசிடம் இதுகுறித்து நியாயம் நீதி கிடைக்கும் என்பதில் நம்பிக்கை இல்லை, பொதுமக்களைத் திரட்டிப் போராடுவதே வழி என்கிறார் ஆண்டகை.

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

பள்ளி மாணவி கிருசாந்தி குமாரசுவாமி சிறீலங்காப் படையினரால் 1996ம் ஆண்டு பாலியல் வல்லுறவுக்கொடுமைக்கு இலக்காகி படுகொலை செய்யப்பட்ட காட்டுமிராண்டித்தனத்தின் தொடர்ச்சி, சந்திரிகா ஆட்சியில் தாராளமாகவே நிகழ்ந்துவருகின்றது. கோணேஸ்வரி, ரஜனி, சாரதாம்பாள், இந்த வரிசை நீண்டுகொண்டே செல்கின்றது. தமிழ்ப் பிரதேசங்களில் சிங்கள ஆக்கிரமிப்புப் படைகளின் இருப்பு தமிழர்களின் வாழ்வுரிமையை மோசமாகப் பாதித்து வருகின்றது. தமிழ்மக்களின் கௌரவத்திற்கும், சுயமானத்திற்கும் சிங்களப்படையினர் சவால்விடுகின்றனர்.

மன்னாரில் ஏழு பிள்ளைகளின் தந்தையாரை, சிங்களக் கடற்படையினர் கழுத்து நெரித்துக் கொன்ற கொடுமையும் கடந்த பெப்ரவரி மாதம் இடம்பெற்றிருக்கின்றது.

இப்படியாக, பிள்ளைகளின் முன்னிலையில், அவர்களது தாய் தந்தையர் கொல்லப்படுவதும், பாலியல் வல்லுறவுகளுக்கு உள்ளாவதும், இளம் பிள்ளைகளை உளவியல்ரீதியாக எவ்வளவு தூரம் பாதிக்கும் என்பதைச் சொல்லத் தேவையில்லை.

பாடசாலைகளில் இராணுவம் நிலைகொள்வதும், காலையும் மாலையும் இராணுவச் சோதனைச் சாவடிகளைத் தாண்டியே பாடசாலை செல்லவேண்டியுள்ளதும், குண்டுவீச்சுக்களுக்கு மத்தியில் வாழவேண்டிய நிர்ப்பந்தமுமாக இளம் தலைமுறை மோசமான உளவியல் தாக்கத்திற்கு உட்பட்டிருக்கின்றது. இந்தக் கொடுமைகளுக்கு நீதிவழங்கத் தவறும் உலகம், விடுதலைப் புலிகள் அமைப்பில் சிறுவர்கள் இணைந்துகொள்கின்றனர் எனக் கவலைகொள்கின்றது. சிறீலங்கா அரச பயங்கரவாதத்தில் இருந்து எமது இளைய சமூகத்தைப் பாதுகாக்க இத்தகைய மனிதாபிமான சக்திகள் முன்வரவேண்டும். எமது இளைய சந்ததி, குண்டுச் சத்தங்கள் இன்றி, இராணுவ துப்பாக்கி முனைகளின் அச்சுறுத்தல் இன்றி, மனம்போல சந்தோசமாக ஆடிப்பாடிக் களிக்கவேண்டும். அவர்கள் இராணுவ சுற்றிவளைப்பிற்குள் இருந்து கற்காமல், இயற்கையாக உலகச் சிறார்களிற்கு இருக்கக்கூடிய கற்றல் உரிமையைப் பெற்று சுதந்திரமாகக் கற்கவேண்டும்.

சிங்கள அரசின் பொருளாதாரத் தடைகளாலும், இராணுவ நடவடிக்கைகளாலும், அதன் ஆக்கிரமிப்புக்களாலும், சிங்கள அரசின் பயங்கரவாதச் செயல்பாடுகளாலும் உடல் மற்றும் உளவியல்ரீதியாக மோசமாகப் பாதிப்படைந்துவரும் எம் இளைய சமுதாயத்தைப் பாதுகாக்க முன்வாருங்கள் என்பதே எமது நீண்டகாலக் கோரிக்கை. [illegible] உரித்தான இயல்பான எண்ணங்களுடன் வாழ்வுரிமைக்கு [illegible] எதிர்பார்ப்புக்களுடன் எங்கள் இளைய சமூகத்தை வாழவிடுங்கள் என்றுதான் நாம் தொடர்ச்சியாகக் கேட்கின்றோம். சிறுவர் படை குறித்து உலகம் பூராவும் பிரச்சாரப்படுத்திவரும் சிறீலங்கா அரசிடமும், அதன் வாடகை வெளிவிவகார அமைச்சர் கதிர்காமரிடமும், சர்வதேச மன்னிப்புச்சபை போன்ற அமைப்புக்கள் இதனை இடித்துரைக்கவேண்டும். அறிவும் ஆற்றலும் ஆரோக்கியமுமான இளைய தலைமுறையொன்று தமிழ்மக்கள் மத்தியில் தலையெடுக்காமல் செய்துவிட, சிங்களப் பேரினவாத அரசு திட்டமிட்டுச் செயற்பட்டுவருகின்றது. அதனை முதலில் தடுத்துநிறுத்துவதே, சர்வதேச மனிதாபிமான அமைப்புக்களின் முதல்பணியாக இருக்க வேண்டும். ■

# சிறீலங்காவின் நவீன போர்த்தளபாடங்கள் தரும் எச்சரிக்கை!

புலிகள் நான்காவது தடவையாக போர்நிறுத்தத்தை அறிவித்து இணக்க முயற்சிகளுக்கான பணிகளுக்கு மேலுமொரு வாய்ப்பை வழங்கியுள்ளனர். இந்த வாய்ப்புக்களுக்கு இணக்கமான பதிலை வழங்காத சிறீலங்கா அரசு, புலிகளின் போர்நிறுத்த அறிவிப்பையும், அதன் நோக்கையும் இழிவுபடுத்திவருகின்றது. ஒருபுறம் புலிகள் 150 தடவைகள் போர்நிறுத்தத்தை மீறிவிட்டதாகக் கூறிக்கொண்டு, மறுபுறம் போர்நிறுத்தம் புலிகளின் பலவீனத்தின் வெளிப்பாடு என சந்திரிகா பண்டாரநாயக்காவின் அரசு பரப்புரை செய்து வருகின்றது. இவற்றின் மத்தியில், சிங்கள அரசின் தொடர்ச்சியான ஆயுத தளபாடக் கொள்வனவுகள் பற்றிய விரிவான தகவல்கள் கொழும்பு ஊடகங்களால் வாரந்தோறும் வெளியிடப்பட்டு வருகின்றன.

01.04.01 திகதியிடப்பட்ட அனைத்து முன்னணி ஆங்கில ஏடுகளும் சிங்கள முப்படைகளினதும் படைவலு அதிகரிப்புச் செய்திகளை வெளியிட்டுள்ளன. ஒரு செய்தி ஏடு சிங்களத் தரைப்படைகளின் புதியரக டாங்கிகளின் திறனை விபரிக்கின்றது. மற்றொன்று, சீனாவிடமிருந்து புதிதாக கொழும்பு கொள்வனவு செய்துள்ள போர்விமானங்கள் பற்றிய பரபரப்புத் தகவல்களை வெளியிட்டுள்ளது. சண்டே டைம்ஸ் ஏட்டின் ஆய்வாளர் இக்பால் அத்தாஸ், சிங்களப் படைகளுக்கு அமெரிக்கா வழங்கவுள்ள பயிற்சிகள் பற்றிய தகவல்களை வெளியிட்டுள்ளார். புலிகளின் பாதுகாப்பு வலயத்திறுள் நுழைந்து புலிகளினால் தாக்குண்ட சிங்களக் கடற்படையினர் தமது பாவனைக்கு ஐம்பது டோரா பீரங்கிப்படகுகள் தேவை என மதிப்பிடுவதாக ஊடகங்கள் வாயிலாக செய்திகள் வெளியிட்டுள்ளனர்.

சிறீலங்கா அரசும், படைகளும் தம்மை மேலும் பலப்படுத்தி, பெரியளவிலான போரிற்குத் தம்மை தொடர்ந்தும் தயார்ப்படுத்தி வருகின்றனர் என்பதே இத்தகைய தகவல்கள் அனைத்திலும் வெளிப்படும் உண்மையாகும். இந்த உண்மையின் அடிப்படையில் சிறீலங்காவின் இராணுவ வியூகங்களை பல ஆய்வாளர்கள் அணுகி வருகின்றனர்.

சிறீலங்காவின் போர்வியூகமானது பெரியளவிலான ஆயுதத் தளபாடக் குவிப்பை மையப்படுத்தியதாகவே அமைந்துள்ளது. உலக இராணுவ சஞ்சிகையான ஜேன்ஸ் டிபன்ஸ் வீக்லிக்கு செவ்வியளித்த சிங்கள இராணுவத் தளபதி பலகல்ல, தமது படையினர் புதிய தளபாடங்களைப் பெற்றமையினால் புதிய தெம்புடன் காணப்படுவதாகக் கூறுகின்றார். தொடர்ந்தும் இத் தளபாடக்குவிப்பு அதிகரிக்கப்பட வேண்டும் என்கின்றார். அண்மையில் யாழ். போர்முனைகளுக்குப் பயணம் செய்த படைத்துறை உயர்தளபதிகள், மேலும் பல நவீனஆயுதங்கள் வரவுள்ளன எனவே புலிகளை விரட்டியடிக்கலாம் என சிப்பாய்களிடம் கூறியதாக செய்திகள் வெளியிடப்பட்டுள்ளது. புதிய பல்குழல் பீரங்கிகள் மற்றும் போர்விமானங்களின் வலுப் பற்றி இராணுவச் சிப்பாய்களுக்கும், சிங்கள மக்களுக்கும் வியப்பூட்டும் விதத்தில் செய்திகளை வழங்குவதை சிறீலங்கா வழமையாகக் கொண்டுள்ளது. ஒப்பீட்டளவில் முன்னைய ஆட்சிகளிலும் மேலாக சந்திரிகா பண்டாரநாயக்காவின் ஆட்சிக்காலம் இத்தகைய போர்.அணுகுமுறையில் அதீத ஆர்வத்தைக் வெளிக்காட்டியது. 1994 முதல் 2001ம் ஆண்டுவரையிலான போர்ச் செலவீன அறிக்கைகளே இதனை தெளிவாகப் புலப்படுத்தும். கடந்த வருடம் ஆனையிறவுப் படைத்தள வீழ்ச்சி ஏற்பட்டதின் பின்னர் ஆயுதங்கள் மட்டுமே போரினை வெல்வதற்கான ஒரே வழி என்கின்ற கோட்பாட்டுடன் சந்திரிகாவின் அரசு பன்மடங்கு நிதியை செலவிட்டு புதிய ஆயுதக் குவிப்பை மேற்கொண்டு வருகின்றது.

இத்தகைய ஆயுதக் குவிப்புக்கள் எவ்வாறு தமிழீழ - சிறீலங்கா உறவையும், சமநிலையையும் பாதிக்கப் போகின்றது?

இந்த ஆயுதக் குவிப்புக்களின் உண்மையான போர்க்கள வலுவை நிர்ணயிக்கும் பெரும் போர் நடவடிக்கைகள் இடம்பெறவில்லையாயினும், யாழ். தென்மராட்சிப் பகுதிகளில் நிலைகொண்டு ஆனையிறவு நோக்கி ஆரம்பிக்கப்பட்ட பெரியதும், சிறியதுமான நடவடிக்கைகள் வெற்றியளிக்கவில்லை என்பதை ஆய்வாளர்கள் சுட்டிக்காட்ட முயல்கின்றனர். புலிகள் தந்திரோபாய நோக்கில் பின்வாங்கிய சாவகச்சேரிப் பகுதிகளை தரைமட்டமாக்கிய சிங்களத்தின் புதிய இராணுவத் தளபாடங்களினால், புலிகள் நிலைகொண்டு போராடும் பகுதிகளில் சமநிலைமாற்றங்களை ஏற்படுத்த முடியவில்லை. இதனை கொழும்பின் பிரபல இராணுவ ஆய்வாளர் சிவராம் தனது ஆய்வுகளில் சுட்டிக்காட்டி வருகின்றார். பல தடவைகள் புலிகளின் போர் வலயங்களை பீரங்கிகளாலும், விமானப்படையின் புதிய யுத்த விமானங்களாலும் தாக்கியதாக செய்திகள் கொழும்பில் வெளியிடப்பட்ட போதும் சிறீலங்காவினால் உண்மையான வெற்றி எதனையும் பெறமுடியாத நிலைமையே தொடர்ந்து நிலவுகின்றது.

எனினும், முல்லைக் கடற்பரப்பில் கடற்புலிகள் இரண்டு டோரா பீரங்கிப் படகுகளைத் தாக்கி அழித்தபோது சிங்களத்தின் நவீன விமானங்களும், கடற்படைக் கலங்களும் செயலற்றுக் கிடந்தன எனவும், இதுபற்றிய உயர்மட்ட விசாரணைகளை சந்திரிகா மேற்கொண்டார் எனவும் சிங்கள ஊடகங்கள் கூறுகின்றன. சில ஆய்வாளர்களுக்கு, முல்லைக் கடற்சமர் ஒரு சிறந்த உதாரணமாக அமைந்தது. புலிகளின் போரிடும் ஆற்றல் மற்றும் நுட்பமான வியூகங்களை வெறும் ஆயுதக் குவிப்புகளால் முறியடிக்க முடியாது என்கின்ற உண்மைக்கு இது ஒரு உதாரணமாகக் கருதப்படுகிறது.

வெற்றிகரமான புலிகளின் நடவடிக்கைகளிற்கு எவ்வாறு எதிர்காலத்தில் சிறீலங்கா பதிலளிக்க முயலும் என்பதற்குச் சிறந்த சான்றாக அண்மையில் வன்னி மற்றும் மட்டக்களப்புப் பகுதிகள் மீது நடாத்தப்பட்ட சிங்கள வான்படைகளின் கண்மூடித்தனமான குண்டுவீச்சுக்களை நாம் கருதலாம். போர்நிறுத்தக் காலத்தில், உலகம் உன்னிப்பாக நிலவரங்களை அவதானிக்கும்போது, துணிச்சலுடன் மக்கள் பகுதிகள் மீது மிக நாசம் விளைவிக்கும் குண்டுகளை வீசும் தைரியத்தை சிங்களத் தலைமை இதன்போது வெளிக்காட்டியது. முல்லைக் கடற்தோல்விகள் மற்றும் புலிகளின் நடமாட்டங்கள் என்பனவற்றிற்கான உடனடி பின்விளைவாக மக்கள் தாக்கப்பட்டனர். முன்பிலும் வேகமாக மக்கள் மீதான தாக்குதல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. சிங்


லெப் ஜெனரல் லயனல் பலகல்ல

களப்படைகளின் புதிய வளங்களும், வலுவும் போர்அரங்குகளுக்கு வெளியே வாழும் மக்கள் மீது தாராளமாகவும், துரிதமாகவும் பயன்படுத்தப்படும் என்பதற்கான ஒரு ஆதாரமாக இது அமைந்துள்ளது. புலிகளின் போர்நிறுத்தமும், இணக்க முயற்சிகளும் தோல்வியடையும் நிலையின்போது எவ்வாறு தமிழ் மக்கள் பாதிக்கப்படுவார்கள் என்கின்ற ஊகத்திற்கு இது ஒரு உதாரணமாக அமைந்துள்ளது. தமது புதிய ஆயுத தளபாடக் குவிப்பு மற்றும் அவற்றிற்கான பயிற்சிகள் காரணமாக, அதிக தாக்கம் விளைவிக்கும் நாசகாரக் குண்டுகளையும், நச்சுப் பொருட்களையும் மக்கள் மீது வீசும் ஆற்றலை முன்னையதிலும் அதிகமாக சிங்களம் பெற்றுள்ளது. புலிகளின் மீது அழுத்தம் கொடுத்தல், மக்களிற்கு ஏற்படும் பேரழிவுகள் மூலம் புலிகளின் போர்வியூகங்களை பின்னடைய வைத்தல் போன்ற காரணங்களுடன் இனஅழிப்பையும் மையமாக வைத்து சிங்களத்தின் புதிய வலு மக்கள் மீது பிரயோகிக்கப்படும் ஆபத்து நிலவுகின்றது.

இத்தகைய நடவடிக்கைகள் வரலாற்றின் பல காலகட்டங்களில் அடக்குமுறைகளை மேற்கொண்டு சமரில் தோல்வி கண்ட அரசுகளினால் மேற்கொள்ளப்பட்ட இயல்பான உத்தியுமாகும். வியட்நாம் இதற்கான உதாரணங்களால் நிரம்பப் பெற்றது. தமது தரைப்படைகளின் இழப்புகளுக்கும், தோல்விகளுக்கும் ஈடுகொடுத்து தனது பெரும் ஆயுத தளபாட பலத்தைப் பயன்படுத்தி மக்களை அழிக்கும் உத்தி அங்கு பிரயோகிக்கப்பெற்றது.

போராடும் எம்மக்களும், புலிகள் இயக்கமும் எவ்வாறு இத்தகைய கோர நடவடிக்கையை எதிர்கொள்ளப் போகின்றது?

சிங்களத்தின் படைக்குவிப்பு எம்மக்களின் வாழ்வுக்கும், இருப்புக்கும் பெரும் அச்சுறுத்தல் என்பதை புலிகள் எப்போதும் கணித்தே வந்துள்ளனர். நான்காவது போர்நிறுத்த அறிவிப்பில் இத்தகைய நவீனரக ஆயுதங்கள் மக்கள் மீது பிரயோகிக்கப்படுவதற்கு எதிரான கடும் விமர்சனங்களை முன்வைத்த புலிகள் இதனை நோர்வே ஊடாக சிறீலங்காவுக்கு தெரியப்படுத்தியிருந்தனர். அரசியல் - இராஜதந்திர முனையில் இதனை உலக நாடுகளின் கவனத்திற்கும் கொண்டு சென்றுள்ளனர்.

எனினும், தமிழீழ விடுதலைப் போராட்டம் இத்தகைய வரலாற்று சூழ்நிலையினை எதிர்த்து நின்றிடும் ஆற்றல் பெற்றதாக வளர்ச்சி கண்டு.

## நாதன்

வேண்டும். சிங்களத்தின் ஆயுதக் குவிப்பிலிருந்து மக்களைக் காத்திடும் வலுவைப் பெற்றிட வேண்டிய தேவையை புலிகள் இயக்கம் பெற்றுள்ள அதே வேளையில், புலிகள் இயக்கத்திற்கு அதற்கான ஆதாரங்களை வழங்கிடும் பொறுப்பு முழு தமிழ் மக்களிற்கும் உரித்தாகியுள்ளது. சிங்களத்தின் நவீன படைக்கலங்களை எதிர்த்து அழிக்கும் புலிகளின் வியூகங்களுக்கு தேவையான வளங்கள் இன்றைய காலகட்டத்தில் மிக அவசியமானவை. புலிகளின் பாதுகாப்பு வியூகங்கள் விரிவு கண்டு மக்கள் குடியிருப்புக்கள் அனைத்தையும் காத்திடும் நிலைக்குச் செல்லும் காலகட்டம் உருவாகியுள்ளது. பாரிய இனஅழிப்பை தடுத்து நிறுத்தி, மக்களைக் காத்தவாறு பெரும்போரினை நடத்திடும் பணியாக புலிகளின் நடவடிக்கை வளர்ச்சி கண்டுள்ளது.


போரில் முனைப்புக் காட்டும் சிங்களத் தரப்பு

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

# அரசின் சமநிலையற்ற பேச்சுக்களும் சமாதானத் தேடலில் நழுவல் போக்கும்

பன்னெடுங்காலமாக இலங்கைத்தீவில் தொடர்கின்ற இனச் சிக்கலை தீர்த்துக்கொள்வதில் அன்றுதொட்டு இன்றுவரை விருப்புக் கொண்டவர்களாக புலிகள் செயற்பட்டு வருகின்றனர். இருந்தபோதிலும் ஆட்சியதிகாரத்தில் அமர்ந்து கொள்ளும் எந்தவொரு அரசும் நியாயமான வழிமுறைகளைக் கையாண்டு பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள மறுத்தது. போரையே பிரதான அரசியல் ஆயுதமாகப் பாவித்து ஆட்சி நடாத்துகின்றது. தொடர் போரை நிறுத்துமாறும், பேச்சுக்கள் மூலம் தீர்வைத் தேடுமாறும் உள்நாட்டில் எழுந்த எதிர்ப்புக்குரல்களிலிருந்தும் சர்வதேச அழுத்தங்களிலிருந்தும் நழுவிக்கொள்ளுமுகமாய் ஒருபுறம் சமாதானப் பேச்சுக்களில் தாமும் அக்கறையுள்ளவர்களாகக் காட்டிக்கொள்ளவும் தவறுவதில்லை. அடிக்கடி மேடைப்பேச்சுக்களிலும், பிரசன்னமாகும் பொதுக்கூட்டங்களிலும் விளாசித் தள்ளுவதிலும் குறைவிடுவதில்லை.

தமிழீழத் தேசியத் தலைவர் அவர்கள் இலங்கையில் நிலவும் இனச்சிக்கலைத் தீர்த்துக்கொள்ளுமுகமாக அமைதிப் பேச்சுவார்த்தைக்கு ஏற்பாட்டாளராக செயற்பட முன்வந்த நோர்வே நாட்டுப் பிரதிநிதிகளை வன்னியில் வைத்துச் சந்தித்த போது, தமிழீழ மக்களினது எதிர்பார்ப்புக்களையும், நிலைப்பாட்டினையும் விளக்கிவைத்தார். அத்தோடு, அச்சந்திப்பின் பின்னாலான நாட்களில் புலிகளினால் படைத்தரப்பு மீது பாரிய வலிந்த தாக்குதல்கள் யாவும் நிறுத்தப்பட்டு யுத்தநிறுத்தம் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. இக்காலக்கெடுவை மூன்று மாதகாலமாக புலிகள் நீடித்தும் வருகின்றனர். இருந்தபோதிலும், இந்நாள் வரையும் பேச்சுவார்த்தைக்குகந்த எந்தவொரு சமிக்ஞைகளையும் காட்ட மறுத்து வருகின்றது சிறீலங்கா அரசு. அது மாத்திரமன்றி போர் நடவடிக்கைகளை மேலும் தொடரும் முகமாக பிரமாண்டமான முறையில் முன்னேற்பாடுகளையும் மேற்கொண்டு வருகின்றது.

அமைதித்தீர்வில் விருப்புக்கொண்ட புலிகளினால் ஏற்படுத்தப்பட்ட யுத்த நிறுத்த நடவடிக்கையை புலிகளின் பலவீனத்தின் வெளிப்பாடாகச் சித்தரித்து நிற்கின்ற சிறீலங்கா அரசு, பலதடவைகள் பெருமெடுப்பில் இராணுவ நகர்வுகள், முன்னேற்றங்கள் எனும் சீண்டல் முயற்சிகள் மூலம் குழப்பியடிக்கவும் துடித்தது. அவ்வேளையிலும் புலிகள் மோதலில் ஈடுபடாது சில விட்டுக்கொடுப்புக்களையும், தந்திரோபாய பின்நகர்வுகளையும் மேற்கொண்டு வந்தனர். இதிலிருந்து புலிகள் சமாதானத்தின் பால் கொண்டுள்ள அக்கறை சர்வதேசரீதியாக பலராலும் நோக்கப்பட்டது.

ஆகவே நாட்டின் பேரழிவுக்குக் காரணமான யுத்தத்தினை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு அரசு மீது உலகளாவியரீதியில் அழுத்தங்களும் பிரயோகிக்கப்பட்டன. உள்நாட்டிலும் பல எதிர்ப்புக் குரல்கள் எழுந்தன. போதாக்குறைக்கு தமிழ்க்கட்சிகளிடமிருந்தும் எதிர்ப்புக்கள் கிளர்ந்தெழுந்தன. இத்தாக்கங்களிலிருந்தும் அழுத்தங்களிலிருந்தும் தப்பித்துக்கொள்ளுமுகமாக சந்திரிகா அவர்கள் ஒருசில மழுப்பல், தளம்பல் விவகாரங்களிலெல்லாம் களமிறங்கினார்.

அவ்வப்போது புலிகளுடன் பேச்சுவார்த்தை நடைபெறப்போகும் திகதிகளை மேலெழுந்தவாரியாகச் சொல்லத் தொடங்கியது அரசு. தாம் ஏற்படுத்தப் போகும் தீர்வுத்திட்டத்தை பாராளுமன்றில் பிரஸ்தாபிக்கப் போவதாகவும் போக்குக்காட்டியது. இவ்வாறாக மேற்படி அழுத்தங்களிலிருந்தும் எதிர்ப்புக்களிலிருந்தும் தப்பிக்குமுகமாக நாடகமாடிக்கொண்டு மறுபுறம் தமிழர் தாயகக் கோட்பாட்டிற்கு விரோதப் போக்கையும், தீர்வு எட்டிவிடக்கூடாதெனும் நிலைப்பாட்டினையும் கடைப்பிடித்து வரும் நாடுகளுக்குச்சென்று மேலதிக உதவிகளையும் இராணுவ அரசியல் ஆலோசனைகளையும் திரட்டி நிற்கின்றது. இந் நடவடிக்கைகளிலிருந்து [illegible] விளங்கிக்கொள்ள முடிகின்றது. ஆக மொத்தம் சந்திரிகா அரசு சமாதானத்தை விரும்பவில்லை. அவர் விரும்புவதெல்லாம் மேலும் மேலும் படைபலத்தைப் பெருக்கி புலிகளை பலவீனமடையச் செய்யவேண்டுமெனும் மன ஆதங்கத்தோடுதான் செயலாற்றுகின்றார் என்பதே ஆகும்.



இது உள்நாட்டுப் 'பயங்கரவாதப் பிரச்சினை' இதில் அந்நியரின் தலையீடு தேவையில்லை என அடிக்கடி பிதற்றித் திரியும் அரசும் அதனோடிணைந்த சக்திகளும் ஒடுக்கப்படும் தமிழினத்தின் பாதுகாவலர்களாகவும், தமிழீழத்தின் ஒருமித்த தெரிவாகவுமுள்ள புலிகளை பிரிட்டனில் தடைசெய்வித்ததுபோல் பிறநாடுகளிலும் தடையுத்தரவை ஏற்படுத்திவிடவேண்டுமெனும் பெரும் மன ஆதங்கத்தோடு அண்மைக்காலமாக பல்வேறு நாடுகளுக்கும் பறந்து திரிவதிலிருந்து அந்த நாடுகளிலும் புலிகளைத் தடைசெய்து விடவேண்டுமென ஆசைகொள்வது புரிந்துகொள்ள முடிகின்றது. ஆகவே பேச்சளவில் மாத்திரம் தெரிகின்றதேயொழிய செயற்பாடுகளிலிருந்து சர்வதேச மயப்படுத்தப்பட்ட விவகாரம் ஒன்றென்ற புரிதலே ஏற்படுகின்றது.

ஒருபுறம் வெளியாரின் தலையீடு இருக்கக்கூடாதென விரும்பும் இவர்கள் மறுபுறம் அனைத்து நாடுகளிலும் தமிழ்த்தேசியப் படையான புலிகளைத் தடைசெய்து விடவேண்டுமென துடிப்பதும் ஏன்? அதாவது, அந்தந்த நாடுகளில் பரந்து வாழும் தமிழீழ மக்களினது ஆதரவுகளையும், குரல்களையும் தடைப்படுத்துவதன் மூலம் சிங்கள மேலாதிக்கத்தின் மனக்கிடையிலிருக்கும் சூட்சுமங்களை நிறைவேற்ற முடியுமா எனும் சோதனையில் இறங்கியுள்ளது போல் இருக்கின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகளினால் கடைப்பிடிக்கப்பட்டுவரும் யுத்த நிறுத்தத்தினை புலிகளின் பலவீனத்தின் வெளிப்பாடாகவே அரசு கருதுகின்றது. எனவேதான் மேலும் மேலும் தடைகளையும் தமிழீழப் போரிற்குக் கிடைக்கும் ஆதரவுகளையும் தடைசெய்வதன் மூலம் இன்னுமதிகமாய் புலிகள் பலவீனப்பட்டு விடுவார்களென நினைக்கின்றது. ஏனெனில் புலிகள் பலமாக உள்ளபோது அவர்களுடன் பேச்சுக்கு அமரும்போது தமது தரப்பால் சில விட்டுக்கொடுப்புக்களையும் இழப்புக்களையும் சந்திக்க வேண்டிவருமென பெரிதும் அஞ்சுகின்றது. எனவே புலிகளை எவ்வளவுக்கெவ்வளவு பலவீனமடையச் செய்ய முடியுமோ அந்நிலைக்கு அவர்களைத் தள்ளியதன் பின்னால் சிங்களபௌத்த பேரினவாதிகளோடு சேர்ந்து தாம் தீட்டிக்கொண்ட சூழ்ச்சிப்பொறிகளை தமிழினத்தின் மீது சுமத்திவிட முடியுமெனும் கற்பனையில் திளைக்கின்றது. இதுவே இன்றைய சந்திரிகா அரசின் புதிய அரசியல் தோற்றப்பாடாக உள்ளதென்று தெளிவாகின்றது.

இந்நாட்டின் பேரழிவுகளுக்குக் காரணமாயமைந்துள்ள கொடிய யுத்தமானது மேற்படி இனவாதிகள் பெற்றெடுத்த குழந்தையேயாகும். அதற்குத் தீனிபோட்டு வளர்த்துவரும் இப்பேரினவாதம் எப்படி ஆரோக்கியமான முறையில் தமிழினத்திற்கு ஒரு தீர்வைத் தந்துவிட முடியும். வெறும் வாய்ச்சவடால் வார்த்தைகளால் மட்டும் சமாதானத்தைப் பற்றிப் பேசித்திரிவதும் அத்தேடலில் விருப்புள்ளவர்களாக நடிப்பதுவும்தான் இவர்களது வேலை. இலங்கையில் உள்ள தேசிய இனங்களில் ஒன்றான தமிழீழத் தேசிய இனத்தை அமைதியாக வாழவிடாது அடக்குமுறைகளைக் கையாண்டுவருவதோடு தமிழீழ மக்களினது மறுக்கவொண்ணாத உரிமைகளை பேரம் பேசவும் முனைகின்றது.

தொடர் யுத்தத்திற்கு முடிவுகட்டி நாட்டில் நல்லதொரு சூழ்நிலையினை ஏற்படுத்திக்கொள்ள சிங்கள அரசு விரும்பின், புரிந்துணர்வுடன்கூடிய விட்டுக்கொடுப்புக்களுடன் பேச்சுக்களின் மூலம் பிரச்சினையை தீர்த்துக்கொள்ள முன்வர வேண்டும். அதை விடுத்து சிங்கள பௌத்த மேலாதிக்கத்தில் ஒருமித்த கருத்தாகவும் தெரிவாகவுமுள்ள போரின் மூலமே தீர்வு தேடலாமென நினைக்குமானால் நாடு பேரழிவுக்குள்ளாகும் நிலைமையினை தடுக்கமுடியாததாகிவிடும்.

விடுதலைப் புலிகளினால் யுத்தநிறுத்தக் காலக்கெடு நீடித்துச் செல்கின்ற இவ்வேளையிலும்கூட அரசு போர்நிறுத்தம் பற்றியோ அன்றி பேச்சுவார்த்தை தொடர்பாக ஆரோக்கியமான தகவல்கள் எதனையும் வெளிப்படுத்தாமலும் இழுத்தடிப்புநிலை தொடர்வதாகவே உள்ளது. இதற்கொரு காரணமும் உள்ளது. அதாவது, அரசின் ஸ்திரத்தன்மையினை தீர்மானிக்கின்ற சக்தியாகவும், அடித்தளமாகவும் சிங்களப் பேரினவாதமே விளங்குகின்றது என்றால் மிகையாகாது. ஆகவே, அவர்களைக் குளிர்விக்க போரே முக்கிய தேவையொன்றாகிவிடுகின்றது. எனவே, போரை ஒருபுறம் தொடர்வதற்குரிய வழிவகைகளை ஏற்படுத்திக்கொள்வதோடு, மறுபுறம் சர்வதேச எதிர்ப்புக்களிலிருந்தும் அழுத்தங்களிலிருந்தும் தப்பித்துக்கொள்ள அமைதிப்பேச்சுவார்த்தைகளில் காதல் கொண்ட ஒருவராக தன்னைச் சித்தரித்து முகத்திரையிட்டு நிற்கின்றார் சந்திரிகா.

**அ. அன்ரனி**

போரே தகுந்த வழி என தாவி அலைந்திருக்கும் சந்திரிகா அவர்களுக்கோ அன்றி அவரோடிணைந்த பேரினவாதச் சக்திகளுக்கோ நாடு சீரழிவதோ, மக்கள் சொல்லொணாத் துன்ப துயரங்களை அனுபவிப்பதோ பெரிதாக எந்தவித பாதிப்பையும் ஏற்படுத்திவிடப்போவதில்லை. ஏனெனில் அவர்கள் விரும்புவதும் அதுவே. ஏனெனில் நாடு இப்போதே போரின் தாக்கம் தாங்காது தள்ளாடும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. ஏற்றுமதி இறக்குமதிகளில் பாதிப்பு ஏற்பட்டு, அன்னியச் செலாவணி வீழ்ச்சியடைந்துள்ளது. அதனால் திரமின்றி உள்நாட்டு உற்பத்திகள் மந்த நிலைக்குத்தள்ளப்பட்டுள்ளது. நாணயத்தின் பெறுமதி குறைப்பும், சர்வதேச நிதி நிறுவனங்களின் தாளத்திற்கேற்ப ஆடவேண்டிய நிர்ப்பந்தமும் சிறீலங்காவிற்கு ஏற்பட்டுள்ளது. எனவே, விரைந்து போரை முடிவுக்குக்கொண்டு வரவேண்டிய இவ்வேளையில் இன்னும் போரை விரும்பி போர்முகச்சாயம் பூசி இருக்கும் இவர்களது கடும்போக்கானது விசனத்தையளிக்கும் விடயமொன்றாக இருக்கின்றது.

எனவே மூக்கிருக்கும் வரை சளியாகத் தொடரும் போரை விரைந்து முடிவுக்குக் கொண்டு வர காரியத்தில் இறங்கவேண்டும். உதட்டளவில் மாத்திரம் சமாதானத்தைப் பற்றி பிதற்றித்திரிவதை நிறுத்தி, நீதியான முறையில் இனச்சிக்கலைத் தீர்க்க முனையவேண்டும். அன்றேல் போரே தீர்வென்றால் தமிழீழத் தேசிய மக்கள் படையின் பேரெழுச்சியின் முன் சிங்களம் மண்டியிட வேண்டிய நிலை கட்டாயம் தோற்றுவிக்கப்படும். அத்தோடு, புலிகளின் பலம் மீண்டுமொருமுறை நிரூபணமாகி தமிழர் தாயகத்தை, அவர் மீட்டெடுப்பதை யாராலும் தடுக்கமுடியாது போய்விடும். ■

ஒருபுறம் வெளியாரின் தலையீடு இருக்கக்கூடாதென விரும்பும் இவர்கள் மறுபுறம் அனைத்து நாடுகளிலும் தமிழ்த்தேசியப் படையான புலிகளைத் தடை செய்து விடவேண்டுமென துடிப்பதும் ஏன்? அதாவது, அந்தந்த நாடுகளில் பரந்து வாழும் தமிழீழ மக்களினது ஆதரவுகளையும், குரல்களையும் தடைப்படுத்துவதன் மூலம் சிங்கள மேலாதிக்கத்தின் மனக்கிடையிலிருக்கும் சூட்சுமங்களை நிறைவேற்ற முடியுமா எனும் சோதனையில் இறங்கியுள்ளது போல் இருக்கின்றது.

Tamileelam Archive




அன்னை பூபதி
திருமதி. பூபதி கணபதிப்பிள்ளை
கிரான், மட்டக்களப்பு
1932.11.03 - 1988.04.19

'புரட்சியின் வேகத்தை ஏகாதிபத்தியத்தால் எதிர்கொள்ள முடியாது. அவர்களின் வலிமையும் அரக்கத்தனமான முயற்சிகளும்கூட முன்னெடுத்துச் செல்லப்படும் புரட்சியைத் தடுத்துவிட முடியாது'

இந்திய மண்ணில் ஆங்கிலேயருக்கு எதிராகப் புரட்சி செய்து, தன்னை அர்ப்பணித்த விடுதலைப் போராட்டவீரன் பகத்சிங் முழங்கிய வரிகள் இவை. ஆனால், அதே இந்திய மண்ணின் ஆட்சியாளர்கள் ஈழத்தில்.

இன்றிலிருந்து பதின்மூன்று ஆண்டுகளுக்கு முன்பு ஆதிக்க நோக்குடன் எம்மண்ணில் கால்வைத்தனர் இந்தியப் படையினர். தமிழீழ மக்களின் சுதந்திரம், சுபீட்சம், அமைதி, விடுதலை, புனர்வாழ்வு என்ற பதங்களை அழகாக தமது வலிய தகவல் தொடர்புச்சாதனங்களூடாகவும், அரசியல் இராஜதந்திர முகவர்களூடாகவும் உலகத்திற்குப் பறையறிவித்து வெள்ளைக் கொடி பிடித்து எமது மண்ணைச் சுற்றி நின்றனர்...

சிங்கள இனவெறிப்பிடிக்குள் தமது வாழ்வை மறந்து போய் ஒடுங்கியிருந்த எமது மண், இந்திய இரட்சகர்களின் அதிகாரச் சக்கரத்துள் நசிபட்டு வீழ்வதை விட, அதனை எதிர்த்து எம்மண்ணைக் காக்கும் சுதந்திரப்போரில் மடிவது மேல் எனக்கருதி இந்தியா எம்மீது திணித்த போரை வீரமுடன் எதிர்கொண்டது எம தேசம். தொடங்கியது ஈழ - இந்தியப் போர்.

இந்நிலையை மாற்றி, எம் நிலையை உலக மனச்சாட்சிகளின் செவிகளுக்கு வெளிப்படுத்த உதயமாகியது ஓர் ஒளி. எம் தென்தமிழீழ மண்ணில் ஒன்றுதிரண்டனர் அன்னையர். இந்திய ஆக்கிரமிப்பை எமது மண்ணில் வாழும் ஒரு சிறு புல்லும் தன் ஆற்றலுக்கு ஏற்ப எதிர்த்து நின்றவேளை, தாமும் தம்மால் முடிந்த பங்களிப்பைச் செய்வோம் என்று சிந்தித்த அன்னையர் நடுவே எம் தாய் பூபதி எழுந்து நின்று எமது மண்ணுக்கே உரித்தான வீரமுடன் அறப்போர் பிரகடனம் செய்தார். எமது உரிமைப் போரை புதிய கோணத்தில் திசை திருப்பினார்.

- அமைதி காக்க வந்த இந்தியப்படை அதற்கு மாறாகத் தமிழீழத்தில் செய்து வரும் மனித வேட்டைகளை நிறுத்த வேண்டும்.
- நாட்டில் சாந்தி, சமாதானம் ஏற்பட சுமுகநிலை தோன்ற தமிழீழ விடுதலைப் புலிகளைப் பேச்சுவார்த்தைக்கு அழைத்துத் தீர்வுகாண வேண்டும்.

என்ற கோரிக்கைகளை முன்வைத்து, சாகும் வரை உண்ணாநோன்பு என்ற அறப்போராயுதத்தைக் கையில் எடுத்தார் 19.03.1988 அன்று சனிக்கிழமை மட்டக்களப்பு மண்ணில், அமிர்தகழி மாமாங்கேஸ்வரர் ஆலயத்தில், நின்ற குருந்த மரநிழலில் அமைந்திருந்த உண்ணாவிரத மேடையில் காலை 10.45 மணிக்கு

திரண்டு பேரணியாகிப் பேரொலி செய்தனர்.

இந்தியப் படையே திரும்பிப்போ,

அன்னை பூபதியைச் சாகடிக்காதே,

புலிகளுடன் பேசி பிரச்சனைக்குத் தீர்வைக்காண், தமிழீழ மண்ணைச் சுடுகாடாக்காதே

என்று எழுந்தன குரல்கள்.

நிலைமை தமக்கு ஆபத்தாய் எழுவதைக் கண்டனர் இந்திய அரசியல், இராணுவ 'வித்தகர்கள்' தாம் வியாபித்து முடிவைத்த இருட்போர்வையைக் கிழித்து எழுந்த எம் ஒளிநெருப்பை அணைக்க முடிவு செய்தனர். தமது மிரட்டல், கொலைப்பயமுறுத்தல், பாசாங்கு, கொச்சைப்படுத்தல் என்ற பல உபாயங்களைக் கையாண்டு அன்னையைப் பணியவைக்க முயன்றனர்.

அன்னை பூபதி எமது மண்ணின் அன்னையர்களின் ஒருங்குதிரண்ட இலட்சிய வடிவம். உறுதி படைத்த தாய் தன் பாசங்களுக்கு அப்பால் நின்று இந்த மண்ணை நேசிக்கும் உன்னதமான தேவதை. ஒரு சிறிதும் அசையாது தன் ஆன்மவலிமையில் உறுதியாய் நின்றார். அமைதிப்படையின் முகமூடிகள் அன்னையின் அனல் கடலில் பட்டுக் கிழிந்தெரியத் தொடங்கின. அகிலம் அன்னையின் அறப்போரை உற்று நோக்கியது. ஒரு வயோதிபத் தாயின் மனஉறுதி கண்டு மலைத்தது. ஆனால் எங்கிருந்தும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளும் யாரும் எடுக்கவில்லை. அன்னையின் உயிரைக் காப்பாற்றவில்லை.

## எழுகதிர் திசையில்

உலகின் 4வது நிலையிலுள்ள இராணுவம் என்று நினைத்திருந்த உலகிற்கு ஏமாற்றம். காரணம் அவர்கள் போரை நடத்தியது ஆயுதம் தாங்கிய போராட்ட வீரர்களுடன் அல்ல. அவர்கள் [illegible] எமது மக்களை, பால், வயது வேறுபாடின்றி. கோயில்களுள், பாடசாலைகளுள், வைத்தியசாலைகளுள் அடைக்கலமாகியிருந்தவர்களை எல்லாம் சுட்டுத் தள்ளினர். தமது தாங்கிகளின் கீழ் போட்டுச் சிதைத்தனர். தமது வக்கிர வெறிக்கு எம் சகோதரிகளைப் பலி எடுத்தனர். அழகிய கிராமங்களாய், வர

தன் போரை ஆரம்பித்தார். கூடியிருந்த மக்களுக்கும், உலகிற்கும் தன் வணக்கத்தைத் தெரிவித்து.

எமது பிள்ளைகள் எம்மைப் பாதுகாக்கத்தான் போரில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களால் நாம் பாதுகாக்கப்படுவோம் என்ற நம்பிக்கை நம்மிடையே உள்ளது. ஆனால் எம்மைப் பாதுகாக்கவே வந்த இந்தியா இன்று சிறீலங்கா இராணுவத்தைக் காட்டிலும், கொடியவர்களாகவே மாறிவிட்டனர். இதனைத் தடுக்கலாம் என்ற உறுதியுடன் நாம் இப்போரில் இறங்கியுள்ளோம். வீரச்

19.04.88 அன்று எழுச்சி கொண்ட அன்னையின் குரலாகப் பற்றியிருந்த இலட்சிய நெருப்பு தமிழீழ மக்களைப் பற்றிக் கொண்டது. ஆம் அன்னையவர்கள் உலக மனச்சாட்சிகளின் நெஞ்சில் அறைந்து அன்னை யாகிவிட்டார். அந்நியில் அசோகச்சக்கரம் கருகியது. தமிழீழ மக்களின் ஆன்மபலம் எத்தகையது என்பதை 1990ம் ஆண்டு மார்ச் மாதம் 24ம் திகதி எமது மண்ணைவிட்டு கௌரவத்தை இழந்து

# எழுந்தனள் அன்னை

க.சோலாதன்

பசப்பு மாயையால் பூத்துக்குலுங்கும் என, இனிய வாழ்வு என்ற கனவில், அமைதிப் படையை எமது பாதுகாவலர் என்று நம்பினர் தமிழீழ மக்கள்.

ஆனால் அறம் காக்கும் என நம்பப்பட்ட அசோகச்சக்கரம், எம்மக்களை, எமது மண்ணை நசுக்க தக்க தருணம் பார்த்திருந்தது. அத்தருணமும், மிகவிரைவில் அமைந்தது. எமது மண்ணும் மக்களும் சிங்களத்துக்கு மீண்டும் அடிமையாவதை எதிர்த்தான் தியாகதீபம் திலீபன். அதிகார வெறியுடன் உருளத் தொடங்கியது அசோகச்சக்கரம். பலி எடுத்த திலீபனுடன் குமரப்பா, புலேந்திரன் மற்றும் பன்னிரு புலிவீரர் குருதி தோய்ந்து, தோய்ந்து உருண்டது. சக்கரம் சுழல துணை நின்றன எமது மண்ணின் கோடரிக்காம்புகள் அது சுழல அனைத்தும் தலைகீழாகச் சுழன்றன.

தம்மை நோக்கி வரும் ஆபத்தை உணர்ந்து மாயை கலைந்து, விழித்தது எமது தேசம். வேகமாய் சுழன்றுவரும்

லாற்று நகரங்களாய் நின்ற எமது கவடுகளை எல்லாம் சுடுகாடாக்கினர். இதன் பெயர்தான் ஒப்பரேசன் பவான். இதுவே எமது மக்களுக்கு இந்திய அமைதிப்படை வழங்கிய சுபீட்சம், சுகவாழ்வு.

ஆனால் இக்கொடுமைகள் உலகின் கண்களுக்கு இருட்டடிப்புச் செய்யப்பட்டன. எமது மண்ணின் இத்துயர் வெளியே தெரியாதவாறு இருளாகி எம் நியாயத்தின் குரல்களை தமது [illegible] தகவல் தொடர்பால் மறைத்து நின்றனர் இந்தியப் படையினர்.

சாவுகளைக் கண்டு நாம் பழகிப் போனவர்களே. என் இறப்பை அடுத்து நோக்கை அடைவோம். ஒருபோதும் அன்னையர் முன்னணி தளராது' என்று உரக்கக் கூறி, அக்கோரிக்கைகளை மீண்டும் உறுதிப்படுத்தினார்.

இதனை ஆரம்பத்தில் அலட்சியம் செய்த இந்திய அரசியல், இராணுவ 'வித்தகர்கள்' நாளாக நாளாக அன்னையின் உறுதி கண்டு பயந்தனர். அன்னையின் அறப்போருக்கு ஆதரவாக மத, பிரதேச வேறுபாடின்றி தமிழீழமக்கள் அனைவரும், மாணவர்கள் உட்பட ஒன்று

> [illegible]

தோல்வி கண்டு வெளியேறிய கடைசி இந்தியச் சிப்பாயின் [illegible] தந்தது.

விடியலின் திசையில் எழுந்த அன்னை எமது மண்ணின் விடிவுக்கான சக்தியாக தனித்துவமாகத் திகழ்கின்றார். அன்னை அன்று உரைத்த ஆன்ம ஒளியின் பலம், இன்று உலகின் கண்களால் சிறிது உணரப்படுகின்றது. அது முழுமை அடையும் வரை கடமை அன்னையவிட்டுச் சென்ற பாதையில் உறுதியுடன் நடப்போம்.

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

# ஆனை[illegible]
# நினைவுப்[illegible]

**தமிழர் தாயகத்தில் தொண்டைக்குள் சிக்கிய முள்ளாக விளங்கிய ஆனையிறவுப் பெருந்தளம் 300 வருடங்களின் பின்னர் தமிழர் கரங்களில் வீழ்ந்தது. இப்படைத்தளத் தகர்ப்பிற்கான முயற்சிகள் 27-03-2000 அன்று தாளையடித் தரையிறக்கத்தோடு ஆரம்பமாகின. 22.04.2000 அன்று ஆனையிறவு தமிழர் சேனையால் கைப்பற்றப்பட்டது. இவ்வரலாற்று நிகழ்வின் ஓராண்டுப் பூர்த்தியை முன்னிட்டு இவ்வாக்கம் பிரசுரமாகின்றது.**

### சென்ற இதழ் தொடர்ச்சி...

இரவுகளில் ஹெலிகொப்ரர்கள் ஆகக்கூடிய ஒளிபொருந்திய 'லைற்'றினைப் போட்டபடி தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபடும். லைற்றுடன் வரும் ஹெலியைக் கண்டவுடன் எல்லோரும் வீடுகளுக்குள்ளும் மரங்களின் கீழும் மறைந்துகொள்வார்கள். பின்பு 'சீப்ளேனிலும்' இப்படி லைற்றைப்பொருத்தித் தேடுதலை நடத்தினார்கள். அநேகமாக வெற்றிலைக்கேணி தொடக்கம் இயக்கச்சி, தாளையடி, ஆழியவளை, நாகர்கோவில், பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, காங்கேசன்துறை என்று கரையோரம் முழுவதும் இந்தத் தேடுதல் நடக்கும். தமிழகத்திற்கும் ஈழத்திற்குமான போராளிகளின் தொடர்பைத் தடுக்கும் நோக்கத்தில் இது நடந்தது. அப்போது இந்தியாவில் பயிற்சியும் தமிழகத்துடன் ஏனைய போக்குவரத்துக்களும் நிகழ்ந்துவந்தது.

சுற்றிவளைப்புக்களும் கைதுகளும் நாளாந்தம் எல்லா இடங்களிலும் நடக்கத் தொடங்கியது. கைதுசெய்யப்படுபவர்கள் குருநகரில் அமைந்திருந்த ஐந்துமாடிக் கட்டட இராணுவ முகாமிலும் ஆனையிறவிலும் விசாரணை செய்யப்பட்டனர். ஆனையிறவு வதை முகாமாக அப்போது இருந்தது.

கவிஞர் தா. இராமலிங்கம் ஆனையிறவு இராணுவ முகாம் வதைமுகாமாக இருந்ததை 1985இல் தனது கவிதையில் இப்படிக் கூறுகின்றார்.

'......

அய்யோ வாடி வீடே
நீவதைகூடம் ஆனாயே!
நகக்கண்கள் ஊடு
நீட்டூசி மாட்டுகிறாய்
குண்டாந்தடியாலே
குதிக்கால் பிளக்கின்றாய்
விரலில் இழை இறுக்கி
தலைகீழாய்த் தூக்குகின்றாய்
மிளகாய்ப் புகையினிலே
மூச்செடுக்க வைக்கின்றாய்


குறியின் தூவாரத்தில்
சலாகை இறுக்குகிறாய்
கதறிக் களைப்புற்று
விடாய் மிக்கு
நீர் கேட்டால்
வாந்தி எடுத்து
வயிறு புண்ணாக
கடல் நீர் பருக்குகிறாய்!

இன்னொரு கவிஞர் ஆனையிறவு முகாமின் சித்திரவதைகள் எப்படியிருந்தன என்று பாடுகின்றார்.

'........

என்ன அது?
எஸ்.லோன் பைப்பா?
இரும்புக் கழியா?
குண்டாந்தடியா?

இருள் படர்ந்து வரும்




இயக்கச்சியில் ஒல்லாந்தர் கட்டிய Pyl கோட்டையின் வரைபடம்

என் கண்களின் மீது
ஒரு மிருகப்பிறவி
வெளிச்சம் பிடிக்கிறான்

என்னை இழுத்துச் செல்கிறார்கள்.
படிகள்
மேலிருந்து கீழாக
ஒன்று
இரண்டு
மூன்று........

சீமெந்து நிலம் முடிகிறது
'அந்த' அறையைக் கடக்கிறோம்
இரத்த வெடிலும்
அவலக்குரலும்
தீயில் எரிந்த தசையும்
மூலைக்குள் தோழர்களும்
சுருண்டு கிடந்த
'அந்த' அறையைக் கடக்கிறோம்

.........'

தமிழ் இளைஞர்கள் மிகமோசமாக வதைபட்டதும், சிலர் கொல்லப்பட்டதும் ஆனையிறவில் நிகழ்ந்தேறியது. அத்துடன், ஆனையிறவு சோதனைச்சாவடி மிக இறுக்கமான நடவடிக்கைகளுக்கு மாறியது. பிரதான வீதியால் பயணஞ்செய்யும் சகல வாகனங்களும் தடுத்து நிறுத்திச் சோதனையிடப்பட்டன. சகல பயணிகளும் சோதனைக்குள்ளாக்கப்பட்டனர். அடையாளஅட்டை காட்டும் படலம் தொடர்ந்தது. இதை கவிஞர் சண்முகம் சிவலிங்கம் இப்படிப் பாடினார்.

'அந்திபட வந்தடைந்த
வாகனங்கள் - ஒருமைல்,

அடையாள அட்டையை பரிசீலிக்கும்
சிறீலங்கா இராணுவம்
கோடிழுத்த மீசையின்
கீழிறக்கச் சுழிப்பில்
வரவழைத்த கடுகடுப்பு.

பெருவெளியின் உறுமல்காற்று
ஆளைத்தள்ளும்
பறக்கும் மணற்பருக்கைகள்
முகத்தைப் பிய்க்கும்.

கீழே எதிரில்
உவர் சதுப்பில்
கனரக வாகனச் சுவடுகளின்
காய்ந்த தடங்கள்

.......'

சோதனையின்போது சந்தேகத்தின் பேரில் பலர் கைதாக்கப்பட்டனர். பின் அங்கிருந்து வெலிக்கடைச் சிறைச்சாலைக்கும், பூசாச் சிறைச்சாலைக்கும் அனுப்பப்பட்டனர்.

இராணுவ முகாம் மேலும் பலப்படுத்தப்பட்டு வீதியில் இராணுவத்தினரே முழுதான சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டனர். இதன் அடுத்த கட்டமாக அத்துலத்முதலி (அப்போதைய பந்தோபஸ்து அமைச்சர்) முதன் முதலில் நேரடியாக 'எரிபொருள் தடை' என்ற பெயரில் பொருளாதாரத் தடையை அறிமுகப்படுத்தினார். யாழ்ப்பாணத்திற்கான எரிபொருளை மட்டுப்படுத்த ஆனையிறவு கடுமையாக இயங்கியது. அத்துடன், பயணிகள் மீதான கெடுபிடியும் அதிகரித்தது. எண்பதுகளின் நடுப்பகுதியில் விடுதலைப் புலிகளின் தாக்குதல் நடவடிக்கைகள் தீவிரமடையத் தொடங்கியபோது ஆனையிறவு இராணுவம் மீதான தாக்குதலும் அதிகரித்தது. கண்ணிவெடிகள் நடத்தப்பட்டன. பின்பு ஆனையிறவிலிருந்து இராணுவம் வெளியேறாது இயக்கச்சிப்பக்கமாகவும், பரந்தன் பக்கமாகவும் காவல் நிலைகள் அமைக்கப்பட்டு தடுக்கப்பட்டது. வெளியேற முயற்சிக்கும் இராணுவத்துடன் அடிக்கடி நேரடிச்சமர் நடக்கும்.

இக்காலப்பகுதியில் ஆனையிறவுச் சோதனைச் சாவடிக்கு வராமல் ஆனையிறவின் கிழக்குப் பக்கமாக இயக்கச்சி ஊடாக வண்ணாங்குளம், கண்டாவளை (கொம்படி) வழியாகவும், கண்டிக்குளம் வழியாகவும் போக்குவரத்துக்கள் நடந்தன. காட்டுமரம் கடத்துவதற்கும், சிறிமா காலத்தில் நெல், அரிசி கொண்டு வரத்தடையிருந்தபோதும் யாழ்ப்பாணத்துக்கு அரிசியும், நெல்லும் கொண்டு போவதற்காகவும் இந்தப் பாதையை சிலர் பயன்படுத்தினார்கள். இதைத் தடுக்கவே இயக்கச்சியில் வாடியடியில் அந்தச் சிறு 'காம்ப்' இருந்தது. ஆனாலும், கடத்தல் தொடர்ந்தது. 1983இன் பின் இயக்கச்சியிலும், தாளையடியிலும் இருந்த இரண்டு சிறிய தங்கு நிலைகளையும் மூடிவிட்டு இராணுவம் ஆனையிறவுக்கு வந்தது. 1985க்குப் பின் கிளிநொச்சியில் இருந்த பொலிஸ் ஸ்ரேசனில் இராணுவ முகாம் சேர்ந்து பொலிஸ், இராணுவக் கூட்டு முகாமாக மாறியது அது.

கள்ள மரக்கடத்தலுக்கே அதிகமாகப் பயன்படுத்தப்பட்டு வந்த வண்ணாங்குளம் - கொம்படிப்பாதையையும், கண்டிக்குளம் பாதையையும் போராளிகள் தமது போக்குவரத்துக்குப் பயன்படுத்தத் தொடங்கினர். நீண்ட வெளிகளும் சதுப்பு நிலமும், புழுதியும், சிறுபற்றைக் காடுகளுமாக இருக்கும் இந்தப் பாதைகளின் பயணம் மிகவும் சிரமமானது. வாகனங்கள் பழுதடைந்தால் அல்லது வேறு தாமதங்கள் ஏதும் ஏற்பட்டால் சாப்பிடுவதற்கோ பிற தேவைகளுக்கோ எந்த வசதியுமில்லாத நிலை. ஆனாலும் ஆனையிறவுக்கு 'பூச்சுற்றி' இந்தப் பயணம் தொடர்ந்தது.

1985இல் ஆனையிறவு இராணுவத்தினர் உப்புக்கூட்டுத்தாபனத்தின் வாகனங்களையும், பரந்தன் இரசாயனத் தொழிற்சாலையின் வாகனங்களையும் தமது முகாமில் நிறுத்தும்படி கட்டளையிட்டனர். இரவில் நிறுத்தப்படும் வாகனங்கள் காலையில் எடுத்து தேவைக்காக அந்தந்த நிறுவனங்கள் பயன்படுத்திய பின் மீண்டும் இரவில் அங்கே நிறுத்தவேண்டும் என்று இராணுவம் பணித்திருந்தது. அப்படியே சில காலம் நடந்தது. போராளிகளின் தேவைக்காக இந்த வாகனங்கள் பயன்பட்டுவிடும் என்ற முன்னெச்சரிக்கையாகவே இராணுவம் இந்த நடைமுறையைக் கடைப்பிடித்தது. பின்பு பல வாகனங்களையும் முகாமிலேயே நிறுத்தி




வெற்றிலைக்கேணியில் ஒல்லாந்தர் கட்டிய பெஸ்சூட்டர் கோட்டையின் வரைபடம்

விட்டது இராணுவம்.

1987இல் இலங்கை-இந்திய ஒப்பந்தம் ஏற்படும்வரை விபரிப்புக்கு அப்பாற்பட்ட வகையில் பல கெடுபிடிகளை இராணுவம் தமிழ் மக்களின் மீது ஆனையிறவில் நடத்தியது. மக்களுக்கான ஒரே பயணப்பாதை இந்தப் பிரதான வீதியாகவே இருந்ததால் முழுமையாக மக்கள் கஸ்ரப்பட்டனர். ஆனையிறவு என்றாலே நெஞ்சில் ஒருவித அச்சம், முள் குத்துவதுபோல ஒரு உணர்வு ஏற்படும்.

அடிக்கடி ஆனையிறவின் இரு முனையிலும் சண்டை நிகழும். பயணம் தடைப்படும். வாகனங்கள் இயக்கச்சியிலும் உமையாள்புரத்திலும் வரிசையாக நிற்கும். இராணுவத்தின் அனுமதிக்காக நீண்டநேரம் காத்திருக்க வேண்டும். நாட்கணக்காகக்கூட பயணம் தடைப்பட்டிருக்கும். அதுபெரும் அவலத்துக்குரிய காலமாக இருந்தது. அனுமதியை இராணுவத்தினர் வழங்கியிருந்தாலும் பயணிகளைத் தாக்குவதும் வாகனங்களைச் சேதப்படுத்துவதும் இராணுவத்தினரின் நாளாந்த நடவடிக்கையாகியது.

ஆனையிறவு உப்பளத்துக்கு வேலைக்குப் போகின்றவர்கள்கூட தாக்கப்பட்டார்கள். நாளாந்தம் நெருக்கடிக்குள்ளானது உப்புக்கூட்டுத்தாபனம். உப்பளத்தில் வேலை செய்தவர்களுக்கு 'பாஸ்' நடைமுறையைக் கொண்டுவந்தது இராணுவம்.

ஆனையிறவு முகாம் இன்னும் இன்னும் பலப்படுத்தப்பட்டு வீதியில் நீண்ட இடத்தில் இராணுவத்தின் நடவடிக்கைகள் பரவியது. பயணம் செய்வோர் முகாமுக்கு அப்பாலே வாகனங்களிலிருந்து இறங்கி நடந்து வந்து அடையாள அட்டைகளைக் காண்பித்து, கொண்டுவரும் பொதிகளைப் பிரித்துக்காட்டிய பின்பு மீண்டும் நடந்துசென்று முகாமைக் கடந்தபின் வாகனத்திலேறிப் பயணிக்கமுடியும். இந்த வழியால் பயணம் செய்வதை நினைக்கும்போது ஒவ்வொரு தமிழனும் அச்சத்தால் உறைந்துபோவான். ஆனால், உயிரே [illegible]. இலங்கை-இந்திய ஒப்பந்தத்துடன் இந்திய இராணுவம் வந்தபோது ஆனையிறவிலும், அது பெரும் முகாம் ஒன்றினை அமைத்தது. இலங்கை இராணுவம் 'Fort Bascula' பகுதியில் தொடர்ந்தும் இருக்க அதன் எதிர்த்திசையில் குறிஞ்சாத்தீவுப் பக்கமாக இந்திய இராணுவம் இருந்தது. இந்திய இராணுவ காலத்தில் அதே கெடுபிடிகள் தொடர்ந்தன. இந்திய இராணுவத்துடன் இராணுவப் பொலிஸ் பிரிவினரும் அதில் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டார்கள். அவர்க

# ...யிறவு ... நிஜமும்

எது விசாரணைக்கூடமாகவும் ஆனையிறவைத் தொழிற்பட வைத்தார்கள். பின்பு இந்திய இராணுவத்துடன் அவர்களால் உருவாக்கப்பட்ட C.V.F என்ற தொண்டர் படையினரும் பயணிகளைச் சோதனையிடும், கைதுசெய்யும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். 'தலையாட்டிகள்' நிறுத்தப்பட்டனர். மக்களின் பயணம் மகா கொடுமைக்குள்ளாகியே தொடர்ந்தது. ஆனால் மூச்சு அந்த வெளியில் பெரும் தீயாய்ப்பரவியது.

1990இல் இந்திய இராணுவம் வெளியேறிய பின் இடையில் ஏற்பட்ட 'பேச்சுவார்த்தைக் காலத்தில்' ஒரு அதிசயமாக ஆனையிறவுச் சோதனைச் சாவடியில் மக்கள் இறக்கி ஏற்றப்படாமல் பயணம் செய்தார்கள். அத்தோடு, விடுதலைப் புலிகளின் வாகனங்களும் போராளிகளும் அணி அணியாக இந்த வீதியால், இராணுவ முகாமின் முன்பாக பயணம் செய்தார்கள். எல்லோருக்கும் வியப்பும் மிக்க மகிழ்ச்சியாகவும் இருந்த காலப்பகுதி அது. இராணுவம் உள்ளே இருந்தது ஊமையாக.

1990 ஜூனில் சண்டை மீண்டும் தொடங்கியபோது மறுபடியும் நெருக்கடிகள் தீவிரமடைந்தன. முன்பைவிட அதிகம் கெடுபிடிகளைத் தொடர்ந்தனர். படையினர் முகாமைவிட்டு வெளியேறாத வண்ணம் எமது பாதுகாப்பு அரண்கள் போடப்பட்டன. சண்டை அடிக்கடி நிகழத்தொடங்கியது. பாதை தடைப்பட்டுத் தடைப்பட்டு பயணம் நடந்தது. சில நாட்களில் அதுவுமின்றி முற்றாகத் தடைப்பட்டுவிட்டது.

முகாமிலிருந்து சூழவுள்ள பகுதிகளை நோக்கிப் படையினர் சகலவகைத் தாக்குதல்களையும் மேற்கொண்டனர். விமானக் குண்டுவீச்சும், ஷெல்லடியும் கடுமையாகியது. வீடுகள் நொருங்கின. மரங்களும் மாடங்களும் சந்தையும் தெருவும் பாழடைந்தன. ஊர்கள் முகமழிந்தன. அவற்றின் ஆத்மா சிதைக்கப்பட்டது. அப்போது இவ்வாறு எழுதும்படி எனக்கேற்றப்பட்டது.

'இரவிரவாக விழுந்து சிதறும்
ஷெல்களில்
எல்லாம் தூளாகின்றன.
வீடுகள்
மரங்கள்
எல்லாம் அழிந்த பின்
இப்போது புழுதிகிளம்பி அலைகிறது.
சாவு நெருங்கி வந்து
என் மூக்கருகில் முகர்ந்து பார்க்கிறது
நான் அழமுடியாமல் நடுங்குகின்றேன்
இன்றைக்கும் எந்நேரம் இது
ஓயுமோ?' (1991)

இந்தத் துன்பங்களுக்குள்ளும் நாம் வாழ்ந்தோம்-போராடி. போராளிகளோடு துணைநின்று. ஆனால், பகைக்கோட்டைக்குள்ளிருந்த பகைமனது தீமூட்டிக்கொண்டேயிருந்தது தொடர்ந்தும்.

III

1991ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதத்தில் ஆனையிறவு இராணுவ முகாம் மீதான தாக்குதலை நாம் தொடர்ந்தபோது ஆனையிறவு இராணுவ முகாம் - வாடிவீட்டிலிருந்து கற்றுலா விடுதி, சந்தை, பாடசாலை, உப்புக் கூட்டுத்தாபனம் வரை பரந்திருந்தது. கிளிநொச்சியிலிருந்த இராணுவத்தினர் அங்கே எமது தாக்குதல் தீவிரமாகியபோது, இறந்தவர்கள் போக எஞ்சியவர்கள் அங்கிருந்து வெளியேறி ஆனையிறவிற்கு வந்திருந்தனர். அத்துடன், பரந்தனில் இருந்த இராணுவத்தினரும் சேர்ந்து கொண்டனர். ஆனையிறவைப் பலப்படுத்திப் பாதுகாக்கும் நோக்கில் பெரும் பிரதேசத்தை ஆக்கிரமித்து இராணுவம் நிலைகொண்டிருந்தது. உப்பளம் முற்றாகச் செயலிழந்தது. ஆனையிறவு, தட்டுவன்கொட்டி, குறிஞ்சாத்தீவு, உமையாள்புரம் ஆகிய இடங்களில் இருந்து மக்கள் அகதிகளாகினர்.

ஆனையிறவு இராணுவமுகாம் மீதான எமது தாக்குதல் மிகப்பெரிய அளவில் நடந்தது. பல நாட்கள் தொடர்ந்த இந்தச் சமரில் சுற்றுலா விடுதி, உப்பள அலுவலகம் ஆகியவற்றைக் கைப்பற்றியிருந்தோம். Fort Bascula வின் முன்பாக இருந்த குறிஞ்சாத்தீவு முகாமையும் தாக்கி அழித்திருந்தோம். முற்றுகையும் சண்டையும் தொடர்ந்தது. இராணுவம் அப்போது பெரும் நெருக்கடிக்குள் சிக்கித்தவித்தது.

இந்த இராணுவத்தினரை மீட்கவும் உதவுவதற்காகவும் ஒருபெரும் படையிறக்கத்தை சிறிலங்கா இராணுவம் அப்போது கட்டைக்காடு - வெற்றிலைக்கேணிப் பகுதியில் மேற்கொண்டது. தரையிறங்கிய படையினர் 'ஒப்பிரேஷன் பலவேகய' என்ற பெயரில் நடவடிக்கையில் ஈடுபட்டனர். இதன்போது, வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு, மண்டலாய், புல்லாவெளி, நித்தியவெட்டை, வண்ணாங்குளம், கோயில்வயல், சங்கத்தார்வயல், இயக்கச்சி ஆகிய இடங்களில் இருந்து மக்கள் அகதிகளாகினர்.

ஒரு வெள்ளிக்கிழமை காலையில் நாங்கள் ஊரைவிட்டு அகதியாகியபோது

'பனையெல்லாம் நுங்குதள்ளி
சோளகம் வீசிய அந்த நாளொன்றில்
எங்கள் வீடும் தோட்டமும்
இரக்கமின்றி அழிக்கப்பட்டது.
நாங்கள் விரட்டப்பட்டோம்
நாங்கள் ஓடிவரும்போது
எங்களின் பூனைக்குட்டிகள்
இடிபாட்டுக்குள் ஈனமாகக்கத்திக்கேட்டது
அந்தவேளையில்
பார்வை குறைந்த அம்மாவின்
மூக்குக் கண்ணாடியைக்கூட
எடுக்க முடியாமற் போயிற்று' (1991)

இப்படித்தான் ஆயிற்று. மக்கள் அகதிகளாயினர். தரையிறங்கிய படையினருடன் எமது படையணிகள் மோதலில் ஈடுபட்டன. இதுவே, ஆகாய கடல் வெளிச்சமர் (ஆ.க.வெ.) என்று பெயர்சூட்டி நடத்தப்பட்ட எமது முதலாவது மரபுவழிச் சமராகும். இராணுவத்தினருக்குப் பலத்த சேதத்தை ஏற்படுத்திய இந்தச் சமர் 'இலங்கையில் இரண்டு இராணுவம் உள்ளது' என்ற உண்மையை வெளிக்காட்டியது. இந்தச் சமரில் விடுதலைப் புலிகளின் தீரமிகு போராற்றலை அப்போது பலரும் வியந்தனர். வாரக்கணக்கில் விரிந்த சமர்க்களத்தில் படைத்தரப்புக்குப் பெரும் சேதத்தை ஏற்படுத்தினர் எமது போராளிகள். எங்கள் தரப்பிலும் அறுநூறுக்கு மேற்பட்ட போராளிகள் வீரமரணத்தைத் தழுவிக்கொண்டனர்.

அப்போது களத்தில் நிகழ்ந்த ஒரு சம்பவத்தை கவிஞர் புதுவை இரத்தினதுரை தமது கவிதை ஒன்றில் இப்படித்தருகின்றார்.

'ஆனையிறவும்
வெற்றிலைக்கேணியும்
அடுத்தடுத்திருந்த காவலரண்களும்



ஊமைநிலவும் உப்பளக்காற்றும்
உன்னை அறியும்
களத்தில் நீ புலியாக மட்டுமல்ல
புயலாகவும், நின்றாய்.

ஆனையிறவு உப்பளமுகாமின்
உள்ளே புகுந்த புலிகளின் பெயரை
சொல்லுக என்றால்
எத்தனை பேர்கள் எடுத்துரைப்பார்கள்?
பரவாயில்லை
போர்வரும் என்றா புலிகள் விழுந்தனர்?
இல்லையே,
ஆனையிறவும்
வெற்றிலைக்கேணியும்
அடுத்தடுத்திருந்த காவலரண்களும்
ஊமைநிலவும் உப்பளக்காற்றும்
உன்னை அறியும்'

இவையெல்லாம் வாழ்வும் அதன் அநுபவப் பதிவுமாக இருந்ததன் சாட்சியங்கள். இவ்வாறு இன்னும்பல பதிவுகள் நம் சரித்திரத்தில் பதியப்பட்டுள்ளன. உமையாள்புரம் பகுதியில் இராணுவம் வெளியேறும் நடவடிக்கையை, இன்னொரு படைப்பாளி

**க. [illegible]**

யான தாமரைச்செல்வி தனது 'பாலம்' என்ற சிறுகதையில் மிகச்சிறப்பாகப் பதிந்துள்ளார். கொம்படிப் பயணம், கிளாலி அவலம் இன்னும் ஆனையிறவின் எல்லையற்ற தீயூழிக்கோலம் சரித்திரங்களாக்கலில் அழியாத மனப்பதிவுகளாக நம் காலத்தில் கலந்துள்ளன.

ஆனையிறவினூடான பயணம் தடைப்பட்டபோது (கேரதீவு-சங்குப்பிட்டிப் பாதையும் அப்போது தடையாகியிருந்தது) கொம்படி - இயக்கச்சி, ஊரியான் இயக்கச்சிப் பாதை மக்களின் பிரதான பயணத்துக்கான பாதையாகியது. பல வசதியீனங்களின் மத்தியிலேயே இதில் மக்கள் பயணித்தனர். கொம்படிப் பாதையில் ஷெல்லித்தாக்குதல் நிகழும். இந்தப் பாதையும் பலவேகய I நடவடிக்கையில் தடைப்பட்டது. 'பலவேகய' நடவடிக்கையில் ஈடுபட்ட படையினர் பின்பு வெற்றிலைக்கேணியிலும், கட்டைக்காட்டிலும் ஆனையிறவிலும் மட்டும் நிலைகொண்டனர். இதனால், மீண்டும் இயக்கச்சி-கொம்படி, இயக்கச்சி-ஊரியான் பாதையில் பயணம் தொடர்ந்தது. 1992இல் மீண்டும் வெற்றிலைக்கேணியிலிருந்து பலவேகய II என்ற நடவடிக்கை மூலம் படையினர் இயக்கச்சியையும் ஆக்கிரமித்தனர். மறுபடியும் இந்தப் பாதை தடைப்பட்டது. இதனால், கிளாலிக் கடனீரேரியூடாக போக்குவரத்துத் தொடங்கியது. இந்தப் பயணத்தைத் தடுக்கும் விதமாக கடனீரேரியில் கடற்படையினர் பல பொதுமக்களைப் படுகொலை செய்தனர்.

கிளாலிக் கடனீரேரியில் கடற்புலிகளின் கையோங்கத் தொடங்கியதும், பூநகரி இராணுவ முகாம் தாக்குதலுக்குள்ளானதும், கடற்படை முடங்கியது. மக்கள் நிம்மதியாகப் பயணத்தைத் தொடர்ந்தனர். ரிவிரச II நடவடிக்கையுடன் தென்மராட்சி பச்சிலைப்பள்ளிப் பிரதேசங்களுக்கு வரும்வரையில் கிளாலியூடான போக்குவரத்தே யாழ்ப்பாணத்திற்கும் வன்னிக்குமிடையில் நிகழ்ந்தது.

IV

1996, 97 காலப்பகுதியில் ஆனையிறவு இராணுவத்தளம் பரந்தன், கிளிநொச்சி வரை பரந்தது. சத்ஜெய I,II,III நடவடிக்கைகளின் மூலம் கிளிநொச்சி நகரைக் கைப்பற்றியது இராணுவம்.

ஆனையிறவு இராணுவத்தளம் விஸ்தரித்தபோது வடபுலத் தமிழர்களின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தது. பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தின் தென்னை, பனை வளங்கள் அழிக்கப்பட்டன. கிளிநொச்சி நகரம் இராணுவ ஆக்கிரமிப்பில் முற்றாக அழிந்தது. இரணைமடுக்குளத்தில் நீர்ப்பாசனத்தால் 20 ஆயிரம் ஏக்கர் நெற்செய்கை இல்லாமற்போனது. நாகர்கோவிலில் இருந்து பூநகரி தொடுவாய் வரையான கடற்பரப்பில் மீன்பிடி கைவிடப்பட்டது. பல கிராமங்கள் அழிக்கப்பட்டன. வன்னியின் உற்பத்திப் பொருட்கள் குடாநாட்டுக்கும் குடாநாட்டுப் பொருட்கள் வன்னிக்குக்கொண்டு வருவதும் தடைப்பட்டது. இலங்கையின் அதிகூடிய உப்பு உற்பத்தி வருமானமும் ஆனையிறவு தொழிலாளரும் இல்லாது போயிற்று. பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை செயலிழந்தது.

மக்கள் அகதிகளாக காடுகளிலும் சிறு கிராமங்களிலும் அகதிகளாயினர். [illegible] வாழும் கனவுகளை கண்ணீர் [illegible] முயன்றார்கள். [illegible] வாழ்க்கையின் அனுபவம் எல்லோருக்கும் உண்டல்லவா!

புலிகளில் சேர்வோரும், புதிதாக எல்லைப்படையில் பயிற்சி எடுப்போருமாக காலம் மாறியது.

'ஆனையிறவு ஒரு மரணப்பொறி. அது சங்குழி' என்ற எண்ணம் எரிந்து நாசமாக, எங்கள் தலைவன், புதிய வழி திறந்தார். சிங்களப் பேரினவாதத்தின் நம்பிக்கை தகர்ந்து போக ஆனையிறவின் இரும்புக்கதவு திறந்துள்ளது. நூற்றாண்டுகளாக வளர்ந்திருந்த விஷமுள்மரம் வீழ்த்தப்பட்டுள்ளது.

இன்று செங்குருதி படர்ந்த புலிக்கொடி காற்றில் அசைகின்றது. அதில் புலியின் மு■

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

# தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை வலியுறுத்தி ஐ.நா மன்றத்தில் எழுந்த குரல்கள்

கடந்த மார்ச் மாதம் 19ஆம் திகதி ஜெனிவாவில் ஆரம்பமாகிய 57வது மனித உரிமைக் கூட்டத் தொடர் தொடர்ச்சியாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

இவ்ஆணைக்குழுவில் கடந்த காலங்களில் அங்கத்துவநாடாக இருந்து வந்த சிறீலங்கா, இம்முறை ஓர் பார்வையாளராக பின்தள்ளப்பட்டுள்ளது. சிறீலங்கா அரசின் தமிழ் மக்கள் மீதான மனித உரிமை மீறல்களுக்கு சர்வதேச சமூகத்தினால் கொடுக்கப்பட்ட தண்டனையென இதை நாம் கொள்ளலாம்.

கடைசியாக வெளியாகிய ஐ.நாவின் புள்ளிவிபரங்களின்படி சிறீலங்கா தொடர்ந்து 6வது தடவையாக உலகில் காணாமல் போவோர் பட்டியலில் இரண்டாவது இடத்தை வகிக்கின்றது. ஐ.நாவின் தரவுகளின்படி 12277 பேர் காணாமல் போயுள்ளனர். இவர்களில் 595 பேர்களுடைய விடயத்தில் மட்டுமே அரசதரப்பு பதில் அளித்துள்ளது. இப்பொழுது நடைபெறும் 57வது ஆணைக்குழுவிற்கு ஆர்ஜென்ரினாவின் ஐ.நா பிரதிநிதி திரு.டிஸ்பு தலைமை வகிக்கின்றார். இருபது வருடங்களுக்கு முன் ஆர்ஜென்டினாவில் நடைபெற்ற அரசியல் பிரச்சினை காரணமாக திரு.டிஸ்பு அவர்கள் பிரான்சில் அரசியல் புகலிடம் பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இவ்வாணைக்குழு ஆரம்பமாகி, முதல் வாரம் சுயநிர்ணய உரிமை பற்றிய விவாதம் ஆரம்பமாகிய வேளையில் இலங்கைத்தீவில் வாழும் தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமை பற்றியும் பல அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் எடுத்துரைத்தனர்.

இதில் மக்கள் விடுதலைக்கான சர்வதேசக் கூட்டமைப்பு (LIDLIP) எனும் அரசசார்பற்ற அமைப்பு, தமிழீழ விடுதலைப் புலிகளின் தொடர்ச்சியான யுத்த நிறுத்த அறிவிப்புக்களை வரவேற்றதுடன் இவ்யுத்தநிறுத்த அறிவிப்புக்களை சிறீலங்கா அரசு ஏற்கமறுத்ததையிட்டு ஆழ்ந்த கவலை தெரிவித்துள்ளது.

தமிழீழ மக்கள் 1977ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் தமது சுயநிர்ணய உரிமைக்காக 75வீத வாக்குகளை அளித்திருந்தார்கள். தேர்தலின் முடிவுகள் தமிழ் மக்கள் தம்மைத் தாமே ஆளவிரும்புகிறார்கள் என்பதை தெட்டத்தெளிவாகக் காட்டியுள்ளன. கடந்தகாலப் படிப்பினைகளில் இருந்து தமிழ் மக்கள் பிரிந்தே வாழ விரும்புகின்றார்கள். இந்நிலையில் சிறீலங்கா அரசு உடன் போரை நிறுத்தி விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிப்பதுடன் தமிழ் மக்கள் மீதான பொருளாதாரத் தடையையும் உடன் எடுக்க வேண்டுமென விடுதலை என்கிற அரசசார்பற்ற நிறுவனத்தின் (Liberation) சார்பில் உரையாற்றிய திருமதி.ஒறேற்றா கேட்டுக்கொண்டார்.

சர்வதேசக் கல்வி நிறுவனத்தின் சார்பில் உரையாற்றிய சட்டதரணி திருமதி. கரன் பாக்கர் கூறியதாவது. இலங்கைத் தீவில் வாழும் தமிழ் மக்களுடைய சுயநிர்ணய உரிமைப் போராட்டம், சர்வதேசச் சட்டங்களுக்கு ஏற்ற ஓர் நல்ல உதாரணமாகும். தமிழ் மக்கள் தமக்கென ஓர் மொழி, கலாச்சாரம், சமயம், அடையாளம் ஆகியவற்றைக் கொண்டவர்கள். இவர்கள் மீது திணிக்கப்பட்ட காலனித்துவ கொள்கையின் பிரகாரம் தனியாட்சியை இழந்து இன்னுமொரு ஆட்சியுடன் இணைக்கப்பட்டவர்கள்.

இலங்கைத்தீவில் வாழும் தமிழ் மக்கள் மிகவும் மோசமான இனத்துவேசத்தை எதிர்கொள்கின்றார்கள். என்பதை முன்னைய கூட்டத் தொடர்களில் நூற்றுக் கணக்கான அறிக்கைகளில் கேட்டுள்ளோம். சுருக்கமாகக் கூறுவதானால் 1948ஆம் ஆண்டு குடியுரிமை பறிப்புச் சட்டம், 1956ஆம் ஆண்டு சிங்களச்சட்டம், 1958ஆம் ஆண்டு தமிழ் மக்கள் மீதான வன்முறை, கிழித்து எறியப்பட்ட இரு சிங்கள- தமிழ் உடன்படிக்கை, மலையகத் தமிழரை நாடுகடத்தல் ஒப்பந்தம், 1972ஆம் ஆண்டு கல்வி தரப்படுத்தல் அதைத் தொடர்ந்து வந்த 1983ஆம் ஆண்டு இனக் கலவரம் ஆகியவை காரணமாக தமிழ் மக்கள் இனவாத அரசிடமிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கு ஆயுதப் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

தற்போதைய சிறீலங்கா அரசு இராணுவத் தீர்வையே தனது நோக்கமாகக் கொண்டுள்ளது. ஆகையால் இலங்கைத் தீவில் சமாதானம் ஏற்பட இவ்ஆணைக் குழு உதவவேண்டும் என்று வேண்டிக் கொண்டார். இதேவேளை ஐ.நா மண்டபத்தில் அமெரிக்கப் பிரதிநிதிகளினாலும், சர்வதேச மன்னிப்புச் சபையினாலும் ஒழுங்கு செய்யப்பட்ட கூட்டங்களில் தமிழர் மனித உரிமை மையத்தின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு, தமிழ் மக்கள் மீதான சிங்கள அரசின் மனித உரிமை மீறல்களை எடுத்துரைத்தனர். ■

## சிறீலங்கா அரசின் போக்குக் குறித்து கனடா சீற்றம்!

ஜெனிவாவில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் 57வது ஐ.நா மனித உரிமைகள் ஆணைக்குழுவில் உரையாற்றிய கனடிய நாட்டின் அரச பிரதிநிதி. மரி ஜெதூர்வஸ் லிட்டி கயர் உரையாற்றுகையில் கூறியதாவது சிறீலங்காவில் தொடர்ந்து நிலவும் யுத்த நிலையே அங்கு நடைபெறும் மனித உரிமை மீறல்களுக்கும், சர்வதேச மனித உரிமை விதிகள் மதிக்கப்படாமைக்கும் காரணம் எனலாம். எனவேதன் கனடா நோர்வே நாட்டின் சமாதான முயற்சிகளை வரவேற்கின்றது. சிறீலங்காவில் தொடர்ந்து அரசபடைகள் நீசத்தனமான மனித உரிமைமீறல்களில் ஈடுபடுகின்றார்கள். அரச பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்த அப்பாவித் தமிழ் இளைஞர்கள் பிந்துநுவேவவில் படுகொலை செய்யப்பட்டதும் இங்கு நாம் நினைவிற் கொள்ளத்தக்கது. கனடா இம்மனித உரிமை மீறல்களில் மிகவும் அக்கறை கொண்டுள்ளது.

தொடர்ந்து நடைபெறும் ஆணைக்குழுவில் ஐரோப்பிய ஒன்றியம் சார்பில் உரையாற்றிய சுவீடன் நாட்டின் அரச பிரதிநிதி ஜோகன் மோலான்டர் கூறியதாவது;

ஐரோப்பிய ஒன்றியம் சிறீலங்காவில் தொடர்ந்து நடைபெறும் ஆயுதப் போராட்டத்தையிட்டு மிகவும் ஆழ்ந்த கவனம் கொண்டுள்ளதுடன், விடுதலைப் புலிகளும் சிறீலங்கா அரசும் பேச்சுவார்த்தைகள் மூலம் சமாதானத்தை அடைய வேண்டும் என்று வலியுறுத்துகின்றது. ஐரோப்பிய ஒன்றியம் சிறீலங்காவில் தொடர்ந்து நிலவும் அவசரகால நிலைமையும், அத்துடன் அங்கு அமுலில் உள்ள பயங்கரவாதச் சட்டத்தின் விளைவாலேயே மனித உரிமை மீறல்கள் நடைபெறுகின்றன என்பதில் அக்கறை கொண்டுள்ளது. சுதந்திர பத்திரிகைகள் மீது அரசினால் போடப்பட்டுள்ள செய்தித் தணிக்கை நடைமுறைகளையும் ஐரோப்பிய ஒன்றியம் கவனத்தில் கொள்கிறது. அத்துடன் சிறீலங்காவில் மீண்டும் அமுலுக்குக் கொண்டுவரவுள்ள மரணதண்டனையை ரத்துச் செய்யுமாறு, ஐரோப்பிய ஒன்றியம் சிறீலங்காவிற்கு வலியுறுத்தியுள்ளது.

## சந்திரிகாவின் ஆரூடமும் வளமையான பசப்பல்களும்

'விடுதலைப் புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தைகள் விரைவில் தொடங்கும் என நான் எதிர்பார்க்கின்றேன்' என சிறீலங்காவின் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இந்தியாவில் வைத்து அமெரிக்கத் தொலைக்காட்சி நிறுவனமான சி.என்.என். தொலைக்காட்சிக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்தன் மூலம் அரசியலில் சில எதிர்பார்க்கைகளை அதிகரித்துள்ளார்.

ஜனாதிபதி சந்திரிகாவின் இப்பேச்சுக்கள் சிலருக்கு ஆச்சரியம் அளிக்கலாம். அரசியல் விமர்சகர்கள் பலருக்கு எதிர்கால அரசியல் பற்றிய விமர்சனம் செய்வதற்கும், எதிர்வு கூறுவதற்கும் வாய்ப்பையும் கொடுக்கலாம். ஆனால், இவரின் இக்கூற்றுக்களின் 'பெறுமதி' என்ன என்பது கேள்விக்குரியதே.

ஏனெனில் சந்திரிகா குமாரதுங்கவைப் பொறுத்து அவர் இரவு ஒன்று பேசுபவர், பகல் ஒன்று பேசுபவர். 1994இல் பதவிக்கு வந்தபோது 'என்ன விலை கொடுத்தும் சமாதானத்தை நிலை நிறுத்துவேன்' என்பது சந்திரிகாவின் வாக்குறுதியாக இருந்தது. ஆனால், அப்பதவிக்காலம் முடியும் வேளையிலும், அடுத்த முறை ஆட்சியைக் கைப்பற்றுவதற்கான தேர்தலின்போதும் 'என்னவிலை கொடுத்தும் யுத்தத்தை நடத்தியே தீருவோம், புலிகளைத் தோற்கடிப்போம்' என்பது அவரது அறிவிப்பாக இருந்தது.

ஆனால், சந்திரிகா குமாரதுங்க யுத்தத்தில் வெற்றி பெறுகின்றாரோ இல்லையோ அன்றிச் சமாதானத்தைக் கொண்டு வர முடிகின்றதோ இல்லையோ, எதுவாகிலும் ஒன்று மட்டும் நிச்சயமாகவுள்ளது. அதாவது, சந்திரிகா குமாரதுங்க இடத்திற்கொன்று, நேரத்திற்கொன்று பேசுகின்றார் என்பது.

இதற்கு எடுத்துக்காட்டாக அவரின் உள்நாட்டுப் பேச்சுக்களும், வெளிநாட்டுப் பேச்சுக்களும் இருப்பதுண்டு. அதாவது, உள்நாட்டில் யுத்தம் குறித்தும், அதில் வெற்றி பெறுவது குறித்தும் பேசும் சந்திரிகா குமாரதுங்க, வெளிநாடுகளில் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு குறித்தும், சமாதானப் பேச்சுவார்த்தைகள் குறித்துப் பேசுவதும் வழமையான தொன்றாகிவிட்டது.

ஆனால், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வெல்லமுடியாத யுத்தத்தில் வெற்றி பற்றி எப்படிப் பேசுகின்றாரோ அதே போன்றே இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு பற்றியும் பேசுகின்றார். இவ்வாறு கூறுவது பலருக்குத் தவறான ஒப்புவமை போன்றும் தெரியலாம். ஏனெனில், இனப்பிரச்சினை ஒன்றிற்கு அரசியல் தீர்வே பொருத்தமான தீர்வாக இருக்கும் என்பது உலகின் பொதுவான அபிப்பிராயமாக இருக்கையில், மேற்கண்ட கூற்றுக்கள் அவநம்பிக்கையை உண்டாக்குவதாகவும், பொறுப்பற்ற கூற்றாகவும் கொள்ளப்படத்தக்க தொன்றாகும்.

அவ்வாறு இருந்தும், தவறான ஒப்புவமை ஒன்றைக் கூறவேண்டிய நிலை உள்ளது என்பதே உண்மை நிலையாகும். ஏனெனில், சந்திரிகா குமாரதுங்க பேச்சுவார்த்தை ஒன்றிற்கான சூழ்நிலை எதையும் உருவாக்க முனையாது பேச்சுக்கள் ஆரம்பிப்பது குறித்துப் பேசுவதும், அதிலும் இரு மாதகாலத்திற்குள் ஆரம்பிக்கலாம் எனக் கூறுவதும் எவ்வாறு ஏற்புடையதாக இருக்கும். அதாவது, சமாதானத்திற்கான சூழ்நிலை எதையும் உருவாக்காது எவ்வாறு பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாகலாம் எனக் கூறமுடியும்?

சந்திரிகா குமாரதுங்க வெளிநாட்டுப் பயணம் ஆரம்பித்ததுமே அவர் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு என்பது பற்றிப் பேசத் தொடங்கியிருக்கின்றார். இதற்கு இலங்கை இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு ஒன்றே சாத்தியமானதாக இருக்கும் என உலகம் கருதுவதோ அன்றி இனப்பிரச்சினை ஒன்றிற்கு இராணுவத் தீர்வு பற்றிப் பேசுவது உலகின் முன் ஏற்கத்தக்கதாக இருக்காது என்பதோ காரணமாக இருக்கலாம்.

ஆகையினால், சந்திரிகா வெளிநாட்டுப் பயணங்களை தொடங்கியதும் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு பற்றியும் உலக நாடுகள் இனப்பிரச்சினையைத் தீர்க்க ஒத்துழைக்க வேண்டும் எனவும் கோரிக்கை விடுவதை வழக்கமாகக் கொண்டிருக்கலாம். ஆனால், இவ்வேளைகளில் வரும் அறிவிப்புக்களைக் கொண்டு அதுவே அரசின் நிலைப்பாடு என்றோ, அதற்காக அரசு முழு முயற்சியில் ஈடுபட்டுள்ளது என்றோ மதிப்பிட்டுவிட முடியாது.

சிறீலங்கா அரசு, விடுதலைப் புலிகள் நான்கு தடவை யுத்தநிறுத்தத்தை அறிவித்தபோதும், இதுவரையில் யுத்தநிறுத்தம் ஒன்று செய்யவோ அன்றி நோர்வேயின் சமரச முயற்சிக்கு பூரண ஆதரவு வழங்கவோ முன்வரவில்லை என்பதே யதார்த்த நிலையாகும். இந்நிலையில் பேச்சுவார்த்தை விரைவில் ஆரம்பிக்கப்படலாம் எனக் கூறுவது ஆரூடம் அல்லது வேறு எதுவாக இருக்கமுடியும். ■

தமிழீழ ஆவணக்காப்பகம் Tamileelam Archive

# விழுதுகள் மட்டுமா வேர்களும்கூட...



தாயின் வித்துடலுக்கு மகனும் அவனது தந்தையும் மண்போட்டு அஞ்சலி செய்த அந்த நிமிடப் பொழுதுகள் தமிழீழ வரலாற்றில் புதிய பக்கம்.

தமிழீழப் பெண் அசாதாரணமானவள் தான். வரையறைகள் தகர்த்து களம் வந்ததும், கடலிலும் தரையிலுமாக சாதனைகள் படைத்ததும், படைத்து வருவதும் சாதாரண நிகழ்வுதான். தம் பிள்ளைகள் போராடுவது மட்டும் போதாது விடுதலைக்கு என்பதுணர்ந்து, பின்கள வேலைகளிலும் மருத்துவ நிலைகளில் பராமரிப்பாளர்களாகவும் ஆபத்தான இக்கட்டான காலப்பொழுதுகளில் தாய்க்கோழியாய்ப் பாதுகாத்தவர்களாகவும், தகவல் சேகரிப்பாளர்களாகவும் என இந்த மண்ணின் அன்னையர் சாதித்தவை ஏராளம். ஆயினும், இத்தனை இருந்தும் சமூக வாழ்வில் ஈடுபட்டுக் கொண்டே, ஒரு தாய் நேரடியாகக் களமுனை சென்றதும், சண்டைப் பொழுதொன்றில் தன்குருதி நிலத்தில் சிந்தி வீரச்சாவடைந்ததும் இதுவே முதல் முறை.

திட்டமிட்டு எம் இனத்தின் மீது போரைத் தொடுத்துள்ள சிங்கள அரசின் இன அழிப்பிற்கு தமிழர்கள் அனைவருமே பலியாகிக் கொண்டிருக்கும்போது, போராட்டக் களத்தில் ஏன் இளையவர்கள் மட்டும் தான் போராட வேண்டுமென்ற விதிமுறை? சாவு தாயென்றோ, மகவென்றோ பார்க்காது தன் கோரப்பற்களை எல்லோர் மீதும் பதிக்கும் தேசத்தில் எல்லோருமே போராடினால்தான் வாழ்வு. தெய்வானை அக்கா களம் வந்ததற்கு இதுவே பிரதான காரணம்.

1992ஆம் ஆண்டுக் காலப்பகுதியிலேயே இயக்கத்தில் இணைந்து கொண்டுவிட வேண்டுமென்ற விருப்பு அவளிற்குள் அதிகம். ஆனால், திருமணமாகி ஒரு குழந்தைக்கும் தாயாகிவிட்ட நிலையில் எப்படி? அதை விட்டுத் தான் போய்விட்டால் தன் குழந்தையின் எதிர்காலம் என்ன? என்று ஆயிரம் போராட்டங்கள் என்றாலும்கூட தனக்கொன்றென்றால் மகனை இயக்கம் பார்த்துக்கொள்ளும் என்ற நம்பிக்கைகள் அந்த தாயுள்ளத்தில் ஆழமாகப் பதிய பல தடவைகள் அவ தன்னையும் இணைத்துக் கொள்ளும்படி போராளிகளின் முகாம் வாசல்களுக்குச் சென்றதும், திருமணமானவர் என்பதறிந்து போராளிகள் அவரை திருப்பி அனுப்பியதும் கடந்த காலம்.

தேசத்தின் விடுதலைக்கான பணியில் கிராமிய, எல்லைப்படைகளென மக்களும் பங்குகொள்ள ஆரம்பித்த காலப்பகுதி தெய்வானை அக்காவைப் பொறுத்தவரை ஒரு வசந்த காலமாகவே இருந்தது. கிராமியப் பயிற்சிப்பாசறைகள் ஆரம்பிக்கப்பட்ட பொழுதுகளில் அவர்தான் முதல் ஆளாக நிற்பார். அடுத்த நாளே இராணுவத்துடன் சண்டை நடக்கப்போவதாக நினைத்துக் கொண்டுதான் பயிற்சி எடுப்பார். அந்த உற்சாகமும் வேகமும் இதுவரை காலமும் எங்கு போயிருந்தன என்று நினைக்கத் தோன்றும் வண்ணமாக ஆச்சரியத்தைத் தரும்.



கிராமியப் பயிற்சிப் பாசறையில் இருந்து நேரடியாகக் களம் செல்லவென எல்லைப் படையொன்றை உருவாக்கும் நோக்கில் பெயர் விபரங்கள் போராளிகளால் கோரப்பட்ட பொழுதில், முதல் உயர்ந்த கைகள் தெய்வானை அக்காவிற்குச் சொந்தமானவையாகவே இருந்தன. அவரின் பெயரை முதலாவதாகப் பதிவு செய்திருந்தபோதும், எல்லைக்கென அப்பிரதேசத்தில் இருந்து மக்கள் களமுனைக்குச் செல்லும்போது தெய்வானை அக்கா தவிர்க்கப்பட்டுவிடுவார். அந்தப்பிரதேசப் பொறுப்பாளராக உள்ள போராளிக்கும் தெய்வானை அக்காவிற்கும் நீண்ட வாக்குவாதம், போராட்டம் எல்லாம் நடக்கும். இறுதியில் 'நீங்கள் அடுத்தமுறை போகலாம். இப்ப வீட்டை போங்கோ மகன் தேடிக்கொண்டிருப்பான்' என்ற வார்த்தைகளோடு அவவின் களமுனைப் பயணம் தவிர்க்கப்பட்டிருக்கும்.

இப்படி ஓரிரு தடவைகள் தனக்கான அனுமதி மறுப்பு கிடைத்தபோதும், அவர் தன் முயற்சியில் இருந்து விலகிவிடத் தயாராக இல்லை. மீண்டும் மீண்டும் வந்து நிற்பார். அந்த முயற்சிக்குப் பலன் கிடைக்கவே செய்தது.

'அக்கா! இந்த முறை உங்களை அனுப்பிறம். ஆனால், களத்திற்கு இல்லை, களமுனைக்குப் பின் உள்ள மருத்துவநிலை ஒன்றுக்கு. இப்ப அங்க நில்லுங்கோ, அடுத்தமுறை முன்னணிக் காவலரணுக்குக் கட்டாயம் விடுறம்'

அப்பிரதேச எல்லைப் படைக்குப் பொறுப்பாக இருந்த அந்தப்போராளியின் வார்த்தைகள் தெய்வானை அக்காவிற்கு தேன் வார்த்தையாக இருந்தன. மனதிற்குள் ஓர் மூலையில் சந்தோசக் குயில் ஒன்று கூவியதோ என்னவோ அந்த முகம் சிரிப்பில் விரிந்து மலர்ந்திருந்தது. அந்தத் தற்காலிக மருத்துவ நிலை, தெய்வானை அக்காவின் போராட்ட வேகத்தை மேலும் புடம் போட்டுக் களத்திற்குச் சென்றே ஆகவேண்டும் என்ற வெறியையே ஏற்படுத்தியதை அவரை அங்கு அனுப்பிய போராளிகளில் ஒருவர்கூட அறிந்திருக்கவில்லை.

வழமையாக மருத்துவ நிலைகளுக்குப் பணிசெய்யச் செல்பவர்கள் ஐந்து அல்லது ஏழு நாட்களில் பணி முடித்துத் திரும்பி வந்துவிடுவதே வழமையாக இருக்க, தெய்வானை அக்காவால் மட்டும் அப்படி விட்டுவர முடியவில்லை. மகனைக் கூப்பிட்டு இடையிடையே பார்த்துக்கொண்டு ஒருமாதம் வரையும் மருத்துவமனையிலேயே நின்று கொண்டார். களமுனையில் இருந்து பலவிதமான காயங்களோடும், மருத்துவ நிலைக்கு வரும் இளம் போராளிகள் முழுமையாக அவரை ஆக்கிரமித்துக்கொண்டது அவரது வார்த்தைகளிலேயே வெளிப்படும். 'இந்தக் குழந்தைகள் எல்லாம் போராட, இவ்வளவு வேதனை அனுபவிக்க நாங்கள் மட்டும் வீட்டில் இருக்கிறது எவ்வளவு கொடுமை'

ஒரு மாதகாலம் அவர் மருத்துவ நிலையில் நின்று பணிபுரிந்தபோது, அங்கு கடமையில் நின்ற மருத்துவப் போராளி ஒருவர் தெய்வானை அக்காவை, அவரது செயற்பாடுகளைப் பற்றிக் கூறும்போது,

'ஒரு காயமடைந்த போராளியின் பராமரிப்புப் பற்றி நாங்கள் அவவிற்கு எப்பவும் எதுவுமே சொல்லிக் கொடுத்ததில்லை. தானே தீர்மானித்துத் தானே எல்லாம் செய்வா. மருந்து கொடுக்கும் நேரங்களை ஞாபகத்தில் வைத்து மருந்துகளை எங்களிடம் பெற்றுக்கொடுப்பா.

காயக்காரர்களைத் தாங்கிவரும் வாகனம் வாசலுக்குள் நுழைகிறதெனில் வாகனம் நிறுத்தப்படுவதற்கு முன்பே காவுதடியுடன் அவ்விடத்திற்குச் சென்று விடுவா. பெரும்பாலும், அவவின் மதியச்சாப்பாட்டு நேரம் மாலை மூன்று அல்லது அதற்குப் பின்னாகத்தான் இருக்கும். ஆனால், அப்படிச் சாப்பிட்டுக் கொண்டிருந்தாலும் வாகனச் சத்தம் கேட்டுவிட்டால் அதனை அப்படியே போட்டுவிட்டு வாகனம் நிற்கும் இடத்திற்கு ஓடிவிடுவார்.

வழமையாக ஐந்து நாட்களுக்கொரு முறை பராமரிக்க வருபவர்கள் மாறிக் கொண்டிருப்பார்கள். புதிதாக வருபவர்களுக்கு அவ்விடத்து நடைமுறைகளை விளங்கப்படுத்துவதும், பராமரிப்பு முறைகளைச் சொல்லிக் கொடுப்பதுமே எமக்குப் பாரிய வேலையாக இருக்கும். ஆனால், தெய்வானை அக்கா நின்ற ஒரு மாதமும் எங்கள் ஒருவருக்கும் அந்தவேலை இல்லை. வருகின்ற புதியவர்களுக்கு அவவே எல்லாம் சொல்லிக்கொடுத்து, அவர்களுடன் சேர்ந்து தானே எல்லாப் பணிகளையும் செய்துவிடுவா.

'கலியாணம் செய்து ஒரு பொடியனையும் பெத்துவிட்டதால்தான் நான் இப்படி இருக்கிறன். இல்லையெண்டால் எப்பவோ உங்களோட வந்திருப்பன்' என்று அடிக்கடி சொல்லுவா. 'இந்தச் சின்னப்பிள்ளைகள் எல்லாம் காயப்பட்டு வர நாங்கள் மட்டும் வீட்டில் இருக்கிறது எவ்வளவு கொடுமை. நானும் சண்டைக்குப்போக வேணும்' என்றுதான் அடிக்கடி சொல்லிக் கொண்டிருப்பா. தெய்வானை அக்கா வேலை செய்யிற வேகத்தைப் பார்த்தால் மற்றவர்கள் சோம்பிப்போய் சும்மா இருப்பது போலத் தோன்றும். சாதாரணமாக பணி செய்ய வருபவர்கள் பெரும்பாலும் சட்டை அல்லது பாவாடை சட்டையுடன்தான் வருவார்கள். அந்த உடையுடன் காவுதடியில் வைத்து காயப்பட்டவர்களைத் தூக்கிச்செல்ல தயக்கம் காட்டுவார்கள். இதிலும், தெய்வானை அக்கா விதிவிலக்குத்தான். ஓடி ஓடி 'ஸ்ரெச்சர்' தூக்குவா, அவர் அப்படித் தூக்குவதைப் பார்த்திட்டு மற்றப் பிள்ளைகளும் தூக்குவார்கள். எங்களால் மறக்கமுடியாத ஒருவர் என்றால் அது தெய்வானை அக்காதான்'

இப்படி, தான் நின்ற ஒரு மாதமும் தன்னை வருத்தி அந்தப்போராளிகளுக்காகவே உழைத்துவிட்டு வீடு திரும்பியவருக்கு களமும் காயமடைந்த போராளிகளுமே எப்போதும் கண்களுக்குள் நிற்கும். அடுத்தமுறை எப்படியும் களமுனைக்குப் போயிட வேணும் என்ற உறுதியை ஏற்படுத்தும்.

'என்னது ஏதோ உடையிற மாதிரி எல்லாம் சத்தம் கேட்குது'

'அம்மா!'

'சரியா கதை, என்ன பழுதாம், ஏன் திடீரென்று நின்றுட்டுது'

'அக்கா! குறை நினைக்காதேங்கோ, வாகனம் பழுது. இப்போதைக்கு எடுக்க முடியும் என்று நான் நினைக்கேல்ல'

'அடக்கடவுளே! புளியம்பொக்கணைச் சந்தி எங்க, வட்டக்கச்சிப் பண்ணை எங்க... என்ன மாதிரி நடந்து போவமா. அதைவிட வேறுவழியில்லை. குறிப்பிட்ட நேரத்துக்குள்ள உங்களை நான் அங்க கொண்டுபோய் விடவேணும்'

'போவம் தங்கச்சி'

'அக்கா! மிச்ச ஆட்கள் பிரச்சினை இல்லை. நீங்கள் அவ்வளவு தூரம் நடப்பீங்களோ'

'நான் நடக்காத தூரமா, வயலில களையிடுங்கிற காலத்தில எவ்வளவு தூரங்களை நடந்து முடிச்சிருப்பன்'

'அப்பசரி, எல்லாரும் நடவுங்கோ'

'அக்கா! உங்களுக்கு கவலை இல்லையோ மகனை விட்டுட்டு வாறதுக்கு'

'கவலைதான், மகனை நினைச்சாக் கவலைதான்'

'அப்ப ஏன் இவ்வளவு பிடிவாதமாக நின்று எல்லைக்கு வெளிக்கிட்டனீங்கள்? முதல் மாதிரி மெடிசில் வந்து நின்று காயப்பட்டவர்களைப் பராமரியுங்கோவன்'

'இல்லை தங்கச்சி... ஒரு மாதம் நான் அங்க நின்றனான்தானே, அந்தச் சின்னனுகள் எல்லாம் காயப்பட்டுவர, நாங்கள் பராமரிக்க நின்றதை நினைக்க எனக்கு வெட்கமா இருக்கும். அதாலதான் லைனுக்குப் போகவேணும் என்று நினைச்சனான். எனக்கேதும் என்றால் மகனை நீங்கள் வளர்க்கமாட்டியளா? வளர்ப்பியள் தானே?'


'அப்ப நீங்கள் கலியாணம் செய்ய முன்னம் ஏன் இயக்கத்தில் சேரேல்ல?'

'எனக்கு அப்பா, அம்மா இல்லை. ஒரு வீட்டில் வேலைக்கு நின்றனான். அந்த வீட்டைத்தவிர வெளி உலகமே தெரியாது எனக்கு. அவைதான் இந்தக் கலியாணத்தையும் எனக்குச் செய்து வைச்சினம். கலியாணம் செய்த பிறகுதான் எனக்கு எல்லோரும் இயக்கத்திற்குப் போறதுகூட தெரிஞ்சது. விருப்பமே இல்லாமல்தான் வாழ்ந்தன். சிலவேளைகளில எல்லாத்திலுமே வெறுப்பு வரும். களை பிடுங்கும்போது பாம்பு கடிச்சுத்தன்னும் சாகமாட்டனா என்றிருக்கும். ஆனால் இவ்வளவு பிள்ளைகள் நாட்டுக்காக

## சிமிழ்

செத்துக்கொண்டிருக்க நான் மட்டுமேன் வீணாக உயிரைப் போக்கவேணும் என்று யோசித்துவிட்டு பேசாமல் இருக்கிறனான் என்ர சாகும் பிரியோசனமானதா இருக்க வேணும் என்று யோசிக்கிறனான்' 'அப்ப சாகிறதுக்கோ சண்டைக்கு வாறீங்கள், சண்டைக்குப் போகிற எல்லாருமே சாகிறேல்ல அக்கா, உங்களுக்குத் தெரியும் தானே?'

'இல்லையில்லை, நான் இப்ப சாகிறதுக்கென்று சண்டைக்கு வரேல்ல. என்ர அப்பத்தைய மனநிலையைச் சொன்னான். இப்ப நிறையச் சண்டைபிடிக்க வேணும்! நிறையச்சாதிக்க வேணும் என்றுதான் நினைக்கிறன் இதுதான் இப்போதைய நிலைப்பாடு' தெய்வானை அக்கா எதிர்பார்த்துக் காத்திருந்த அந்தச் சந்தர்ப்பம் விரைவாகவே அமைந்திருந்த காவல் நிலைகளில் ஒரு பகுதியில் குறிப்பிட்ட காலத்திற்குப் பணியாற்றத் தெரிவு செய்யப்பட்டவர்களில் ஒருவராக தெய்வானை அக்காவும் புறப்பட்டு, வழியில் வாகனம் பழுதாகியதால் புளியம்பொக்கணைச் சந்தியில் இருந்து வட்டக்கச்சிப் பண்ணை வரையும் நடந்து சென்ற போது தன் வாழ்க்கை வரலாறு முழுவதையும் அந்தப் போராளியிடம் கூறியபடி சென்ற அக்கா பின்னர் எங்களைச் சந்திக்கவே இல்லை. ஒரு மகனின் தாயாக மட்டுமன்றி இந்த மண்ணின் தாயாகவே மாறிவிட்ட அந்த வீரப்பெண்மணி, இந்தத் தேசத்திற்குக் கிடைத்த பேறு என்பதைத் தவிர வேறெந்த வார்த்தைகளால் அந்தத் தாயை விபரிக்க முடியும்? ■



# சுடுகலனே பேசும்

1992 அப்போது ரஜீந்தினி ஏழு வயதுச் சிறுமி. இவளுக்குப் பின் இரண்டு தம்பிகள். கடைக்குட்டி ஜெயராஜ் பிறந்து சில மாதங்கள்தான்.

அம்மா களுவங்கேணியில் மீன் எடுத்து அயல் கிராமங்களுக்கெல்லாம் சென்று, வியாபாரம் செய்யும் ஒரு வியாபாரி. ஒவ்வொரு நாளும் காலையில் சென்று, மதியம் வீட்டுச் சமையலுக்கும் மீனுடன் வந்து விடுவார். சிறிது நேரம் ஆனாலும், அம்மா படலையடிக்கும், வீட்டுக்குமாக நடந்து கொண்டே இருப்பார்.

இவள் மட்டுமல்ல, மட்டக்களப்பிலுள்ள எல்லாப் பெண்களுக்குமே இது வழக்கமாகிப் போய்விட்டது. வேலைக்குப் போன கணவனோ, மகனோ வீடு திரும்ப சற்றுத் தாமதமானாலும் அவர்கள் பதைபதைக்கத் தொடங்கிவிடுவார்கள். என்ன நடந்ததோ, ஏது நடந்ததோ, எந்தக் 'காம்'பில் பிடித்து வைத்துள்ளார்களோ, எந்தக் காட்டினுள் பிணமாகப் போட்டுள்ளார்களோ என மனம் ஏங்கத் தொடங்கிவிடும்.

வீடுகளில் இருந்தாலும்கூட இவர்கள் பயமின்றி இருப்பார்களா என்ன? எப்போதுமே ஏக்கமும் பயமுமாகத்தான் இவர்களின் வாழ்நாட்கள் கழியும். எந்த நேரமும் இராணுவம் வரலாம், சுற்றி வளைக்கலாம், கைதுகள் செய்யலாம் இரவுகளில் கவலையின்றி நிம்மதியாக உறங்கிப் பல வருடங்கள். அன்றும் அப்படித்தான், அதிகாலையில் தேசவிரோதக் கும்பல்களாலும், இராணுவத்தினராலும் சுற்றி வளைக்கப்பட்ட அந்தக் கிராமத்திலிருந்து, பல ஆண்கள், திருமணமானோர், திருமணமாகாதோர் என்று வயது வேறுபாடின்றிக் கைதுசெய்து கொண்டு செல்லப்பட்டவர்களில் ரஜீந்தினியின் அப்பாவும் ஒருவர்.

கதறி அழுவதைத் தவிர இவர்களால் வேறென்ன செய்யமுடியும்?

அன்று மாலையே அப்பாவின் உடல் ஆடைகள் ஏதுமற்ற வெற்றுடலாக, நிறையவே அடிகாயங்களை ஆடைகளாகப் போட்டு, தலை சிதைந்து அடையாளம் தெரியாத நிலையில் கிடந்தது.

'தேசவிரோதி ஒருவனால் தலையில் கல்லுப்போட்டுக் கொல்லப்பட்டார்' என்று ஏனைய தப்பி வந்தவர்கள் கூறினார்கள். அன்று தாயின் சட்டையைப் பிடித்துக் கொண்டு கதறிய ரஜீந்தினியின் பிஞ்சு மனதில் அப்பாவின் சாவு படமாக்கப்பட்டுவிட்டது. இன்று எம்முடன் அதைப் பகிர்ந்து கொண்ட இவள், வரதப் பிரியாவாகி.... நாளை இவளின் துப்பாக்கிக் குண்டுகளே எதிரிகளுக்குப் பதில் சொல்லும்.

பூமாதேவி

## உங்கள் கவனத்திற்கு




அடக்குமுறை இராணுவங்களின் பிடியில் சிக்கி, எமது மக்கள் பட்ட கொடுமைகள், துன்பங்கள் எண்ணிலடங்காதவை. தசாப்தங்களாக எம் மக்கள் எத்தனை துன்பங்களை துயரங்களைச் சந்தித்துவிட்டனர். மனதுக்குள் புளுங்கிக் கொண்டிருக்கும் அந்தக் கொடிய அனுபவங்களை, நினைவுகளை கொட்டித்தீர்க்க இங்கே களமமைத்திருக்கின்றோம். இந்தப் பகுதியில், எமது மக்கள் தாம் பட்ட துயரங்களை துன்பங்களை கொட்டித் தீர்க்கலாம். இது கற்பனை கலந்த கதைக்களமாக நிட்சயமாக இருக்காது. உண்மையின் களம் இது. நமது அனுபவங்களை, அல்லது, நமக்கு முன்னால் நிகழ்ந்த தாம் அறிந்த கொடுமைகளை யாரும் எழுதியனுப்பலாம். யாவும் உண்மையாக இருத்தல் வேண்டும் என்பது எமது தாழ்மையான வேண்டுகோள். உங்கள் நாடுகளில், எமது கிளைகளுக்கூடாகவோ பிரதிநிதிகளுக்கூடாகவோ இப்பகுதிக்கு உங்கள் ஆக்கங்களை அனுப்பி வையுங்கள். உங்களுடன் தொடர்பு கொள்வதற்கான தொலைபேசி இலக்கம் மற்றும் முகவரியை முக்கியமாக குறிப்பிடவும். வெளியிடப்படும் வாக்குமூலம் பகுதியில் உண்மையான பெயர் விபரங்களை வெளியிடுவதை தவிர்ப்பதும் தவிர்க்காமல் விடுவதும் உங்களைப் பொறுத்தது.

நேரடியாக எமக்கு எழுதி அனுப்பவிரும்புவோர். KALATHIL C.C.T France. 341 rue des Pyrénées, 75020 Paris. FRANCE. என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.

# உண்மையொன்று ஊமையாகிறது....

லம்போ - (ஜேர்மனி)

ஐயோ அம்மா!
என்று கத்திக்கொண்டு
குந்திவிருந்தாள் முற்றத்திலை
குழந்தை ஒன்று குமரியாகி!
அடுப்படியைவிட்டு
ஓடி வந்த தாயவளோ
உச்சியிலை கையை வைச்சு
திகைத்துப்போய் நின்றாளே!

அயல்வீட்டு குமரி எல்லாம்
கதவடைச்சு வீட்டுக்குள்ளை
மூச்சு விடும் சத்தம் கூட
கேட்கவில்லை அமைதியாகி
மூலையிலை!
எந்த வீட்டு மானோ
சிங்கத்தின் வாயில்
சிக்கியது? பெருசுகள்
எல்லாம் புலம்பியது!

ஊருக்குத் தெரியாது
சந்தோசச் செய்தி ஒன்று
சங்கடத்தில் வாடுதென்று!
சந்தனம் பூசிக் குளிப்பாட்ட
முடியாது என்னவளே நான்
என்ன பண்ண?

பொத்தி வளர்த்த
சொத்துமகளே உச்சிமோந்து
முத்தமிட மனசும் இடம்
கொடுக்குதில்லை
காஞ்சு போன கழுத்துக்கு
சங்கிலி போட வக்கில்லை

சொந்தங்களை வரவழைச்சு
சிங்கங்கள் போய்விடும்
மானாட்டம் வளர்த்தவளை
பலிகொடுக்க நேர்ந்துவிடும்!
சொந்தம் என்று சொல்லி
குடி நிலத்தில் குந்தியிருக்க
முடியவில்லை — இப்படி எங்கள்
வாழ்விருக்க இயற்கை ஏன்தான்
உன்னைப் பார்த்து இரங்கவில்லை
ஐயோ நான் என்ன செய்ய
முந்தநாள் அடிச்ச செல்லிலை

சந்தைக்குப்போன கொப்பர்
வீடு திரும்பவில்லை — கடப்
பிறந்தவனோ ஒருவன் அவனும்
போராட்டக் களத்திலை
ஆசைக்கு ஒரு பிள்ளை
வளர்த்தேனே என் ராசாத்தி
இந்தச் சிங்கக் கூட்டத்து
மத்தியிலை பக்குவமா ஆளாக்க
வழி ஒன்றும் தோன்றவில்லையே
அம்மா! அடியே! கண்ணம்மா!
அரும்பாக இருந்திருந்தால்
புலம்பாமல் இருந்திருப்பேன்
இன்றோ நாளையோ
வேட்டைக்கு வருங்கெண்டு
நினைச்சாலே நெஞ்செல்லாம்
வெடிக்குதடி!

இராப்பகலா எனக்கு
இனி நிம்மதி இல்லை
கால் கையும் இயங்குதில்லை
கழுத்துக்கு அங்காலை
மச்சிலும் இயங்குதில்லை
கண்ணுக்கு எட்டிய தூரம்
எவனையும் காணவில்லை
இன்றைக்கென்று பார்த்து
வீட்டுப் படலையையும்
சென்றி இல்லை!
காலநேரம் தெரியாமல்
கடவுள் உனக்கேனடி மச்சம்
இப்பெரிய பரிசு
தந்தானோ?
அடியே நான்
செத்த பெட்டை!
செறுடி மகளே செறுடி
ஓயாத அலைகள்
இன்றோ நாளையோ
பாழை மீட்கும் சுதந்திர
விழாவேன்று உன்
நடக்கும் நடக்கும்!
அது வரைக்கும் இந்த
உண்மை ஊமையாகிப்
போகட்டும்!

# தமிழீழப் பொருளாதாரம் வளங்களும் - வாய்ப்புக்களும் ஓர் அறிமுகம்

ஆயுதப் போராட்டமாக முனைவிட்ட தமிழீழ விடுதலைப் போராட்டம் இன்று இராணுவ அடக்குமுறைகளிலிருந்து தமிழீழத்தை விடுவிப்பதனை மட்டும் நோக்கமாகக் கொள்ளாமல், பொருளாதார அடக்குமுறைகளிலிருந்தும் சமூக அடக்குமுறைகளிலிருந்தும் தமிழீழத்தை விடுவிப்பதனை நோக்கமாகக் கொண்ட ஒரு பாரிய விருட்சமாக வளர்ந்துள்ளது. இராணுவ முனையில் தமிழீழ விடுதலைப் போராட்டத்தை வென்றெடுக்க வேண்டிய அதே நேரத்தில் பொருளாதார முனையிலும் வெற்றிகாணவேண்டிய நிலையில் நாம் உள்ளோம். ஒரு தேசிய இனத்திற்கு இருக்கவேண்டிய அடிப்படைப் பண்புகளில் ஒன்று அதற்கென ஒரு தனியான பொருளாதாரம் இருத்தலாகும். ஆனால், நீண்ட காலமாகவே சிறீலங்காவில் தங்கியிருக்கும் ஒரு பொருளாதாரமாகவே தமிழீழம் இருந்து வந்ததனால் எமக்கென ஒரு தனியான பொருளாதாரத்தினைக் கட்டியெழுப்பத் தவறிவிட்டோம். இந்நிலையில் தமிழீழப் பொருளாதாரத்தின் வளங்கள் வாய்ப்புக்கள் என்பன தொடர்பாக நீண்டகாலமாகவே சந்தேகங்கள் எழுப்பப்பட்டு வந்துள்ளன.

எமது பிரதேசத்தின் வளங்களைப் பற்றிய ஆய்வும் அவற்றின் பயன்பாடும் சிறீலங்கா அரசாங்கத்தினாலேயே மேற்கொள்ளப்படவேண்டிய நிலையில், கல்வி, வேலைவாய்ப்பு போன்ற துறைகளில் கடந்த காலங்களில் தமிழர்கள் எவ்வாறு புறக்கணிக்கப்பட்டார்களோ அதேபோன்றே எமது பிரதேசத்தின் வளங்களும் புறக்கணிக்கப்பட்டிருந்தன. உதாரணமாக மன்னார் கடற்கரையோரங்களில் பெற்றோலிய வளம் இருப்பதற்கான சாத்தியக்கூறுகள் உண்டென ஆய்வாளர்கள் கூறுகின்றனர். ஆனால், அவ்வாறு உண்மையில் இங்கு பெற்றோலியவளம் கண்டுபிடிக்கப்படுமேயானால் தமிழீழப் பிரதேசங்களின் முக்கியத்துவம் அதிகரித்துவிடும். அது தமிழீழ விடுதலைப் போராட்டத்தினை மேலும் முன்னெடுக்கச் செய்துவிடும் என்ற பயம் காரணமாக அரசாங்கம் இவ்வாய்வில் அக்கறை காட்டவில்லை. இவ்வாறான ஒருநிலையிலேயே எமது வளங்களைப் பற்றி நாம் சந்தேகம் கொள்கின்றோம். அவ்வாறாயின் உண்மை நிலை என்ன?

எமது பிரதேசத்தில் உள்ள கனிப்பொருள் வளங்களில் குறிப்பிடுக் கூறக்கூடிய ஒன்று திருகோணமலை மாவட்டத்தில் புல்மோட்டைப் பிரதேசத்தில் காணப்படும் இல்மனைட் வளம் ஆகும். இங்கு ஆண்டொன்றுக்கு 150,000 மெட்ரிக் தொன் செப்பனிடப்பட்ட இல்மனைட் உற்பத்தி செய்யமுடியும். சர்வதேசரீதியில் இல்மனைட் உற்பத்தியில் நாம் அனுகூலமான நிலையினைக் கொண்டிருக்கின்றோம். புல்மோட்டையில் உள்ள இல்மனைட் படிவுகளிலிருந்து 70-80 சதவீதமான செப்பனிடப்பட்ட இல்மனைட்டைப் பெற்றுக்கொள்ள முடியும். ஆனால், உலகின் பெரிய இல்மனைட் உற்பத்தி நாடுகளில் ஒன்றான அவுஸ்திரேலியாவின் இல்மனைட் படிவங்களிலிருந்து 50 வீதமான செப்பனிடப்பட்ட இல்மனைட்டே பெறப்படுகின்றது. மேலும், புல்மோட்டையில் வருடாந்தம் 8500 மெட்ரிக் தொன் ருட்டைல் (Rutile) கனிப்பொருளும், 500 மெட்ரிக் தொன் சிக்கோன் (Zircon) கனிப்பொருளும் பெறப்படுகின்றது. மேலும், கடற்கரையோரங்களில் பெருமளவு கண்ணாடி மணல் திட்டுக்கள் காணப்படுவதும் குறிப்பிடத்தக்கது.

கடல் வளங்களை எடுத்து நோக்கும்போது தமிழீழம் தனது தேவைக்கும் மேலாகவே மீன், கருவாடு போன்ற உற்பத்திகளை மேற்கொள்ளுகின்றது. இராணுவ நடவடிக்கைகளினூடும், கடல் பாதுகாப்பு வலயம் போன்றவற்றினாலும் தற்போது மீன், கருவாடு போன்றவற்றின் உற்பத்திகள் வீழ்ச்சியடைந்துள்ளன. 1983ஆம் ஆண்டிற்கு முந்திய உற்பத்தித் தரவுகளின்படி தமிழீழத்தின் வருடாந்த சராசரி மீன் உற்பத்தி 110,000 மெட்ரிக் தொன் ஆகும். இதில் விரயமானது போக 77,000 மெட்ரிக் தொன் மீன் நுகர்விற்குக் கிடைக்கக்கூடியதாக உள்ளது. ஆனால், தமிழீழத்தின் வருடாந்த மீன் தேவை (24 லட்சம் மக்கள் என்ற அடிப்படையில்)

சி.வரதராஜன் (சிறப்புக் கலைமாணி)

**கண்ட போர்க்களங்களும் பாசறை வாழ்வும்**

**எதிரிப் படை வந்தவழியைத் தடுத்தவன்- அவன்**
**ஏறிவந்த படைக்கலங்களை அழித்தவன்**
**பெற்றதாயைப் பிரிந்து மண்ணைக் காத்து நின்றவன்**
**பிரபாகரனின் பிள்ளையாகக் கதை முடித்தவன்.**

# தமிழீழத் திருநாட்டின் புரட்சிப் பூ

ஜே.அரவிந்தன்

தமிழீழத்தின் தலைசிறந்த வடமராட்சியின் அலை கடல் பாயும் நீலக்கடற்கரையும், தென்னஞ்சோலைகள் நிறைந்ததும், வெண் மணற்பரப்பும், சிறுசிறு பற்றைக்காடுகள் நிறைந்ததும், செழிப்பு மிக்கதும், வளங்கொழிக்கும் சிறிய கிராமந்தான் ஆழியவளை. இந்த மண்ணின் சின்னப்பு சுகிர்தம் பெற்றோருக்கு ஐந்து ஆண்பிள்ளைகள்; அவர்களுக்கு நான்காவது பிள்ளையாகப் பிறந்தவன்தான் இன்று எல்லோராலும் புகழப்படும் கப்டன் சுகு.

இவனுக்கு பெற்றோரிட்ட பெயர் சாந்தகுமார் எல்லோரும் இவனைச் செல்லமாக சாந்தப்பன் என்று அழைப்பார்கள். இவன் தனது ஆரம்பக்கல்வியை ஆழியவளை சி.கி.த.க. பாடசாலையிலேயே பயின்றான். இங்கு கல்வியிலும், விளையாட்டிலும், சிறந்து விளங்கிய இவன் பெற்றோர், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப்பலரிடமும் நன்மதிப்புப் பெற்று விளங்கிய காலத்தில்தான் சிங்கள அரசின் அராஜகப் போர் மீண்டும் தமிழருக்கு எதிராக 2ஆம் கட்ட ஈழப்போர் ஆரம்பித்து, சிறிது காலத்தில் தனது பள்ளிப்படிப்பை இடையில் நிறுத்தி சில பள்ளித்தோழர்களுடன் எமது தலைவர் வழியில் தமிழீழத்தின் போராட்டத்தின்பால் தன்னையும் இணைத்துக்கொண்டான்.

இவன் கிராமத்து மக்கள் அநேகர் கடலை நம்பியே வாழ்பவர்கள். அவர்களிலும் பலர் கடலில் கடற்படையின் கொலை வெறியர்களால், இவனது உறவுகள் உயிரற்ற உடல்களாக கரையொதுங்கியதையும், எதிரியின் எறிகணை வீச்சினாலும் விமானத்தாக்குதலாலும், எமது மக்கள் நாளுக்குநாள் கொல்லப்படுவதைக் கண்டும், கேட்டும் புலியாகப் புறப்பட்டவனுக்கு பாசறையில் முதலில் சுகு என்றும் பின் தமிழப்பன் என்றும் அழைக்கலாயினர். சகதோழர்கள். இவன் பயிற்சிப் பாசறையில் விரைவாகவே ஆரம்பப் பயிற்சிகளை முடித்துக் கொண்டு யாழ். மாவட்டத்தில் பலகளங்களுக்குச் சென்று திரும்பியவன். அவற்றுள் பலாலி பெருந்தளத்தில் இருந்து எதிரியால் மேற்கொண்ட புயல் காற்று இராணுவ நடவடிக்கையை முறியடிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட சமரில் மிகவும் வீரத்துடன் சண்டையிட்ட இவ்வீரன், அங்கு சண்டையை வழிநடத்திய பொறுப்பாளரிடமிருந்தும் ஏனைய போராளிகளிடமிருந்தும் நன்மதிப்பைப்பெற்றான்.


பின் ஒரு சில நாட்கள் தனது வீட்டிற்கும் லீவில் வந்து சென்றான். தாயை ஆழமாக நேசித்தவன், இந்த மண்ணும், மக்களும் எதிரியின் கொலைவெறிக்கு ஆளாக முற்படும்போது முறியடிப்பதற்கும் போரில் வெல்வதற்கும் விடுதலைப் புலியின் பாசறையில் ஆரம்பப்பயிற்சியை முடித்துப் பின் விசேட தாக்குதற்படையில் நீண்ட நாட்களாகவே தனது உடலை வருத்தி உள்ளத்தை வைரமாக்கி பல வருடங்கள் கடும்பயிற்சி பெற்று ஒரு அணிக்குப் பொறுப்பாளராகவும் இருந்து, களங்களில் எதிரிக்கு சிம்ம சொப்பனமாக விளங்கியவன்.

1995ஆம் ஆண்டு மணலாற்றுப்பிரதேசம், இது தமிழீழத்தின் இதயபூமி, இங்கு எதிரியின் ஐந்து முகாம்கள் மீதான தாக்குதலிலும் இவன் பங்குகொண்டான். இப்படி தமிழீழத்தில் எதிரிக்கு எதிராக மேற்கொண்ட பல தாக்குதல்களில் இவன் தன் முத்திரையைப் பதிக்கத் தவறவில்லை. 1995ஆம் ஆண்டு இறுதியில் சிங்கள அரசினால் மேற்கொள்ளப்பட்ட பெரும் எடுப்பிலான தமிழ் மக்களைக் கொல்வதற்கும், சொத்துக்களை அழிப்பதற்கும் ஆக மேற்கொண்ட சூரியக்கதிர் 1 என்ற இராணுவ நடவடிக்கை யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட வேளையிலும், அந்த முறியடிப்புச் சமரிலும் ஈடுபட்டான். இறுதியில் இச்சமர் 52 நாட்களாகத் தொடர்ச்சியாக எதிரியால் இச்சிறு நிலப்பரப்பை ஆக்கிரமிப்பதற்காக தனது படைபலங்களை ஒருமுகப்படுத்தி, தனது தாக்குதலை ஒருமுனையாகவும், கண்மூடித்தனமாக எறிகணை வீச்சும் விமானத்தாக்குதல்களையும், எதிரி மேற்கொண்ட வேளையிலும் எமது போராளிகள் கடும் சமர் புரிந்தனர். இறுதியில் வலிகாமத்தில் வாழ்ந்த மக்கள் எல்லோரும் ஓரிரு தினங்களுக்குள்ளாகவே இடம்பெயர்ந்ததும், சிங்கள அரசிற்குப் பேரிடியாக விழுந்தது. இச்சமரை எமது தலைவர் எதிரிக்கு எதிராக எமது போராளிகளின் மன உறுதியிலும், யுத்த தந்திரத்தினாலும் ஒரு மரபுவழி இராணுவத்திற்கு எதிராக, நாமும் மரபுவழிப் படையாக அப்படையணிகளுக்கு எதிராகச் சமர்புரிந்தோம்.

பின் யாழ். நகர்ப்பகுதியில் இருந்த எதிரிக்கு ஆங்காங்கே அடிக்கடி தாக்குதல்கள் இடம்பெற்றன. இக்கரந்தடித்தாக்குதல் அணியிலும் இவன் பங்குகொண்டான். இப்படிப்பல தாக்குதல்களைச் செய்துகொண்டிருந்த வேளையில்தான் 05.03.96 அன்று யாழ். மாவட்டத்தின் திருநெல்வேலியில் இடம்பெற்ற நேரடிமோதலில் இவன் இந்த மண்ணை முத்தமிட்டான். தான் நேசித்த மக்களுக்காக தன்வாழ்வையும், உயிரையும் அர்ப்பணித்து தமிழீழ மக்களின் நெஞ்சங்களில் நிலைத்துவிட்டான். இவன் எமது மண்ணில் மக்கள் சுதந்திரமாகவும், கௌரவமாகவும், பாதுகாப்பாகவும் வாழ வேண்டும் என்பதற்காக தன்னையே தமிழீழ மக்களிற்காக ஈந்தவன். இவனது கனவுகளை நனவாக்க வேண்டும் என, இவனது நினைவுகளில் உறுதி எடுத்துக்கொண்டு, இவனது தியாகத்தினை மெச்சுவோம்! இவனது இலட்சியப்பாதையில் நாமும் பின் தொடர்வோம்!



கப்டன் சுகு/ தமிழப்பன்
(சின்னப்பு-சாந்தகுமார்)
மகான் வீதி, ஆழியவளை, யாழ்ப்பாணம்.
17.01.1977-05.03.1996




தமிழ் ஆவணக்காப்பகம்
Tamileelam Archive

20,200 மெட்ரிக் தொன் மட்டுமேயாகும். எனவே, தமிழீழத்தின் மொத்த மீன் உற்பத்தியில் 26 சதவீதமே அதன் நுகர்விற்குப் போதுமானதாகும். தமிழீழத்தின் வருடாந்த சராசரிக் கருவாட்டு உற்பத்தி ஏறத்தாழ 11,500 மெட்ரிக் தொன் ஆகும். தமிழீழத்தின் வருடாந்த கருவாட்டுத் தேவை 5,300 மெட்ரிக் தொன் ஆகும். எனவே, தமிழீழத்தின் கருவாட்டு உற்பத்தியில் 46 சதவீதம் அதன் நுகர்விற்குப் போதுமானதாகும். மேலும், முல்லைத்தீவிலிருந்து பொத்துவில் வரையும் அமைந்துள்ள நீர்நிலைகள் இறால் வளர்ப்பிற்கு உகந்தவை என்பது கண்டறியப்பட்டுள்ளது. மட்டக்களப்பில் கொக்கட்டிச்சோலையில் 1980களின் ஆரம்பத்தில் இறால் பண்ணை ஒன்று தனியாரினால் ஆரம்பிக்கப்பட்டது. இப்பண்ணை உலகிலேயே மிக உயர்ந்த அளவு இறால் உற்பத்தியினைச் செய்து சாதனை படைத்தது குறிப்பிடத்தக்கது. இத்தகைய முறையின் கீழ் பல உலக நாடுகள், ஒரு ஹெக்டேயருக்கு 1000-1200 கிலோகிராம் இறால் மட்டுமே உற்பத்தி செய்கின்றன. ஆனால், கொக்கட்டிச்சோலை இறால் பண்ணையில் இப்பிரதேசத்தின் நீரின் உயர்ந்த தரம் காரணமாக ஒரு ஹெக்டேயருக்கு 2000 கிலோகிராம் இறால் உற்பத்தி செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இந்த இறால் பண்ணை 1987இல் சிறீலங்கா இராணுவத்தினால் முற்றாக அழிக்கப்பட்டுவிட்டது.

நெல் உற்பத்தியினைப் பொறுத்தவரையில் தமிழீழம் தனது தேவைக்கும் மேலாகவே உற்பத்தியினை மேற்கொள்கின்றது என்பது யாவரும் அறிந்ததே. தமிழீழத்தின் வருடாந்தச் சராசரி நெல் உற்பத்தி 652,000 மெட்ரிக் தொன் ஆகும். இதிலிருந்து நுகர்விற்காகக் கிடைக்கக்கூடிய அரிசியின் அளவு ஏறத்தாழ 4 இலட்சம் மெட்ரிக் தொன் ஆகும். ஆனால், தமிழீழத்தின் வருடாந்த அரிசித்தேவை (24 இலட்சம் மக்கள் என்ற அடிப்படையில்) 245,000 மெட்ரிக் தொன் ஆகும். இந்நிலையில் நாம் எமது அரிசி உற்பத்தியின் தரத்தில் கூடிய கவனம் செலுத்துவோமேயானால், அரிசி ஏற்றுமதிக்குரிய வாய்ப்புகள் அதிகமாகும்.

இன்று தமிழீழத்தில் நடைபெறுகின்ற யுத்தத்தினால் எமது பிரதேசங்கள் அனைத்தும் அழிக்கப்படுகின்றன என்பது உண்மையே. ஆனால், இந்த அழிவுகளைக் கண்டு நாம் அஞ்சவேண்டியதில்லை. இரண்டாம் உலகப் போரில் யப்பான், ஜேர்மனி போன்ற நாடுகள் தரைமட்டமாக்கப்பட்டன. ஆனால், இன்று அந்நாடுகள் பொருளாதார முன்னேற்றத்தில் முதன்மையான நாடுகளாகத் திகழ்கின்றன. இதற்குத் தேவையானது, அன்னியராதிக்கத்திலிருந்து விடுபடலும், உழைப்பும், விடாமுயற்சியும், மன உறுதியுமேயாகும். இவை தமிழீழ மக்களிடம் நிறையவே உண்டு. எனவே, இன்று எமக்குத் தேவையானது அன்னியராதிக்கத்திலிருந்து விடுபடல் மட்டுமேயாகும். எமது பிரதேசத்தை நாமே ஆளவேண்டும். எமது வளங்களைப் பயன்படுத்தவும், அனுபவிக்கவும் எமக்கு அதிகாரம் வேண்டும். எனவே, இராணுவ அடக்குமுறையிலிருந்து எமது மண்விடுவிக்கப்படும்போது மட்டுமே எமது வளங்கள் எமக்குக் கிடைக்கும். அப்போது, இந்த அழிவிலிருந்தும், இடப்பெயர்வுகளிலிருந்தும், அழிவிலும் [illegible] புதிதாக பல நகரங்கள் எழுந்துவரும். சாம்பலிலிருந்து எழுகின்ற பீனிக்ஸ் பறவையைப்போல இந்த அழிவின் சாம்பலிலிருந்து ஒரு புதிய வளமான தமிழீழ சமூகமொன்று கட்டியெழுப்பப்படும்.

**குறிப்பு** [illegible]

## எமது போராட்டமும் தன்சார்புப் பொருண்மியமும்

# பாய்ந்து களம் புகுவேன்

அந்நியன் வந்துனைக் கூறுகள் போட்டிட
ஆவி தரித்திருப் பேனோ?
துன்மதி மூடர்கள் தம்முடல் தன்னை
துளைத்திடா தொழித்திருப் பேனோ?
இன்னும் எத்தனை எத்தனை வேள்விகள்
இங்கு இவருடல் வேகும்
என்னை யாரென எண்ணி விட்டனை
எனதாவியே சுடர் சோதியே!
உன்னுடல் மிதித்திங்கு எவன்வரு வானோ
என்னுயிர் தரித்திருப் பேனோ?
கண்ணிலும் மேலான சுதந்திரம் காத்திடக்
காற்றென நானெழுவேனே
பொன்னென மணியென கொட்டிக்கிடந்தமெய்
புழுதியாய் மாறிட விடுவேனோ?
தன்மானப் பரம்பரைத் தமிழன் இருக்கையில்
தாயே நீ அடிமை ஆகிடுவாயோ?
வந்தவன் எங்கடா வாரிப் புழுதியை
வாயில் நிறைத்திடு வேன்யான்
மந்தியிவன் வால் வெட்டி முறித்துமே
முரசுகள் கொட்டிடு வேனே!
சுந்தர மானநம் தேவியின் மேனியில்
சிங்களன் கால்படு மாமோ?
பந்தென அவன் தலை மோதி உதைத்திட
பாய்ந்து களம்புகு வேன்யான்.

முருகு பாரிமகன்.

>I< >I< >I<

# துயர்க்காலம்

அவசரமாய் அணிவகுத்து
போருக்குப் புறப்படும் போது
ஊரில் இருந்து
சதா எனை நினைந்து
அழுதிருக்கும் உன் முகம்
இதயத்தில் மினுங்குது மங்கலாய்.

விண்ணில் இறைந்து கிடக்கும்
வெள்ளித்துகள்களில் ஒன்றாய்
எட்டாத் தொலைவில் நீ...

காற்றிடையே
அலைந்து கரையும் தீச்சுவாலையாய்
இனம்புரியாத்துயர் மனசோடு...

என் மனசு
கல்லாகிப் போனதாய் உணராதே
பிரிவுத்துயர்க்கடலில்
அமுங்கி அமுங்கி நிமிருகிறேன்.

காலமிதன் கோலமிது.

வெடித்துச் சிதறும் களத்திலிருந்து
உயிர்கொண்டு திரும்ப நேர்ந்தால்
உனைக்காண வருவேன்
மனஞ்சிலிர்த்து.

அமரதாஸ்



ஊர்விட்டு ஊர் மாறி
வேர்விட்ட மண் திறந்து
நீர் தேடி அலைகின்ற விருட்சம்
கிளைவிட்ட விழுதுகளோ
சுமைதாங்க மறுக்குங்கால்
வரலாறு சுமக்கும் அத்துயரம்

# வேலி

எனது
எல்லைகளையும்
மீறி விரியும்
துயர்களைக் களைந்து
உயிர்க்கதியால்களின்
ஓர அணிவகுப்பாய்
நீ,
நூல் பிடித்த நிரையில்
நீள் வரிசையாய்
நிமிர்ந்த நெடும்
தனிமரங்கள்,
தொலை தூரக் கண்களுக்கு
தோப்பாகித்
தோன்றும் அதிசயம் உன்னிடத்தில்
எனது
கொல்லைப் புறத்தின்
எல்லைகளில்– பகைமையை
கொள்ளையிடும்
கூட்டங்களை
கூர்முட்கள் சுமந்து
எதிர்க்கின்றாய்.
நீயோ!
நட்ட நாட்களில்
நான்காணாய்,
காலமறிந்து
கர்ப்பம் சுமந்தாய்
வெட்ட வெட்ட
மூர்க்கமாய் தளைத்தெழுந்து
என்
இருப்புக்கு இப்போது
உறுதி செய்கின்றாய்
உவப்போடு...

[illegible]